Registered as a News paper in Ceylon

விலை சதம் 10

யாம்ப்பாண மக்களுக்கோர் நற்செய்தி!
புதிதாகத்திறக்கப்பட்டஸ்தாபனம்




அல்பேட் எதிரிசிங்க
பிரசித்தமான கண்பரிசோதகரும்
மூக்குக்கண்ணாடி விற்பனையாளரும்
45,மெயின்வீதி, : யாழ்ப்பாணம்

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி என் 49

மலர் 4 யாழ்ப்பாணம் சுபகிருது தை 26 ஆம் நாள் றம்ழான் பிறை 12 (8-2-63) வெள்ளிக்கிழமை 358

# பொலிஸ் தாக்குதல் பற்றி அறிக்கைஎங்கே?

## சபை முதல்வர் சில்வா மீது எம். பி.க்கள் கண்டனம்

### பார்லிமெண்டில் திரு. கந்தையா கிளப்பிய 'முக்கிய விஷயம்'

கொழும்பு, வியாழன்

பார்லிமெண்டில் இன்று கேள்வி நேரத்திற்குப்பின், திரு. கந்தையா எம். பி. பொது ஜன முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விஷயத்தைக் கிளப்புவதாகவும், யாழ்ப்பாணம் பொலிசார் எம். பி. க்கள் உட்பட ஆர்ப்பாட்டக்காரர்களைத் தாக்கியதே அவ்விஷயம் என்றும் குறிப்பிட்டார்.

"ஜனவரி 8-ம் திகதி இப்பிரச்னை பற்றி விவாதிக்கப்பட்டபோது, திரு. கெனமன் எழுப்பிய கேள்விக்கு முழு விசாரணை நடைபெற்ற பின் ஒரு அறிக்கை விடுவதாக சபை முதல்வர் இணக்கம் தெரிவித்தார்" என அவர் கூறி, எதிர்க்கட்சி அங்கத்தினர்களுக்குப் பதிலளிக்கையில் சபை முதல்வர் திரு. ஸி. பி. டி' சில்வா கூறிய பதிலை ஹன்ஸார்டிலிருந்து வாசித்துக் காட்டினர்.

திரு. கந்தையா மேலும் கூறியதாவது:-

"பொலிஸாரினல் நாங்கள் தாக்கப்பட்டிருப்பதாக இச்சபையில் எம். பி. க்கள் புகார் கூறியிருந்தும் சபை முதல்வர் எதுவும் செய்யவில்லை. சபை முதல்வரிடமிருந்து ஒரு அறிக்கையை எதிர்பார்க்கிறேன். அவர் அறிக்கை வெளியிடாவிட்டால் இச்சபையில் அங்கத்தினராய் இருப்பது அவமானம் எனக்கருதுவேன்."

திரு. அமிர்தலிங்கம்: "அறிக்கை ஒன்று விடுப்பது அவரது கடமையாகும்."

திரு. கந்தையா: "உதவிப் பொலிஸ சுப்ரிண்டன்களாலேம அல்லது பொலிஸ இன்ஸ்பெக்டர்களாலோ தாக்கப்படுவோம் என்ற அச்சமின்றி யாழ்ப்பாணம் தெருக்களில் நாங்கள் நடமாட சுதந்திரம் இருக்க வேண்டும். பூரண விசாரணை நடத்தி ஒரு அறிக்கை விடுவதாக சபை முதல்

8-ம் பக்கம் பார்க்க

## இன்று வருகின்றனர்

யாழ்ப்பாணம், வெள்ளி

ஹர்தராமணி இன்டஸ்ட்ரீஸ் ஸ்தாபனத்தார் நடத்திய 'விடுமுறைப் போட்டி' யில் பரிசுபெற்றவர்கள் இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர். இவர்கள் இன்றுகாலை பலாலி விமானநிலையத்தில் வந்திறங்குவர்.

## மேற்கு நியுகினி

ஜாகர்த்தா பெப். 7

மேற்கு நியுகினி, இந்தோனிஷியாவுடன் எப்போது சேரவேண்டும் என்பதுபற்றித் தீர்மானிக்கப்பட்டிருப்பதாயும் ஐ. நா. பிரதம உதவிக் காரியதரிசி திரு. நரசிம்மன் நியுயோர்க் திரும்பியுதாண்டிடம் இதுபற்றித் தெரிவிக்கும்வரை திகதிவெளியிடப்படமாட்டாதென்றும் இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி டாக்டர் சுபாந்திரியோ கூறினர்.

## துங்குவுக்கு 60 வயது

புதுடில்லி, பெப். 7

மலாயா பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மானின் 60 வது பிறந்ததினத்தை முன்னிட்டு திரு. நேரு அவருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பியிருக்கிறார்.

## பார்லிமெண்டை நான் ஏன் ஒத்திவைத்தேன்?

### உப சபாநாயகர் அளித்த பதில்

கொழும்பு, வியாழன்

சபையின் நிரந்தரக் விதிகளின்படியே தாம் கடந்தபுதன் கிழமை பார்லிமெண்டை ஒத்திவைத்ததாக உப சபநாயர் திரு. ஹியூ பெர்னுண்டோ கூறினர்.

சபையில் பாரதூரமான ஒழுங்கீனம் இருந்து, சபாநாயகர் சபையை ஒத்திவைக்க வேண்டும் எனக் கருதினல் தான் குறிப்பிடும் காலம்வரை அவர் சபை ஒத்திவைக்கலாம் எனக்கூறும் இந்த நிரந்தரவிதியை அவர் குறிப்பிட்டார்.

மந்திரிகளும், பாராளுமன்றக் காரியதரிசிகளும் சபையில் பிரசன்னமாயிருக்காததால் ஒழுங்கு முறைகள் சபையில் அன்று நிலவவில்லையென்றும் உப-சபாநாயகர் தெரிவித்தார்.

எந்தச் சட்டத்தின் கீழ் உப-சபாநாயகர் சபையை ஒத்திவைத்தார் என்று நியமன எம். பி. திரு. சிங்கிள்டன் சால்மன் எழுப்பிய ஒழுங்கு பிரச்சனைக்கு பதிலளிக்கையிலேயே உப-சபாநாயகர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். புதன்கிழமை சபை ஒத்திவைக்கப்பட்டது சட்டத்திற்கு புறம்பானதாக இருந்தால் இன்று நடைபெறும் நிகழ்ச்சிகள் புதன் நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியாகவே கருதப்படவேண்டும் என திரு. சால்மன் தெரிவித்தார்.

வடபகுதி அசைஸ் விசாரணை

## "ஏன் அடித்தாய் என்றதும் என்னையும் அடித்தார்"

### வவனியா கொலை வழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வடபகுதி அசைஸ் கோர்ட்டின் இரண்டாவது வழக்காக நேற்று வவனியாகொலைவழக்கு நீதியரசர் பி. ஸ்ரீஸ்கந்தராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

1961-ம் ஆண்டு கங்குனி மாதம் 18-ம் தேதி பாவற்குளத்தைச் சேர்ந்த பீடி முதலாளி எஸ். எம். ரணசிங்காவை கந்தசாமி என்பவர் கொலை செய்ததாமி குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் புறக்டர் ஏ. அமிர்தலிங்கத்தின் அனுசரணையுடன் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் ஆஜராஞர் அரசாங்கத்தினல்எதிரிசார்பில் திரு. வீ. நடராசா நியமிக்கப்கப்பட்டிருந்தார்.

கமக்காரனும், வண்டில் சொந்தக்காரனுமாகிய சீமான் சாட்சியமளித்தபோது கூறியதாவது "61-ம் ஆண்டு பங்குனி மாதம் 18-ம் தேதி எனது வண்டியில் வவனியாவிற்கு நெல் ஏற்றிச்சென்றேன் ஆறரை மணியளவில் நம் பண்டா கடையில் வண்டியை நிற்பாட்டியபோது ரணசிங்காவைச் சந்தித்தேன். தான் கந்தசாமியிடம் போவதாக ரணசிங்கா கூறினர். நான் அவரிடம் வவனியா போவதாகச் சொன்னேன் அவர் போனபின் சத்தம் கேட்டது. கந்தசாமியின் வீட்டின் முன்னல் இருவர் நிற்பது தெரிந்தது. யாருக்கு அடிவிழுந்த தென்று முதலில் தெரியவில்லை இரண்டாம் அடிவிழும்போது ஆட்களைக் காணக்கூடியதாக இருந்தது. கந்தசாமி அடித்ததும் ரணசிங்கா கீழேவிழுந்தார் ரணசிங்காவை எதற்காக அடித்தார் என்று கேட்டேன்? அப்போது எனக்கும் கந்தசாமி அடித்தார் என் கையிலிருந்து டோர்ச்லைட் கீழே விழுந்தது எனது கையிலும் காயம் ஏற்பட்டது. நான் திரும்பி வண்டிலுக்கு போனேன். வண்டியில் நெல் கூலிக்கு ஏற்றச் சென்றேன். வவனியாவிலிருந்து அடுத்தநாள் 12 மணிக்கு புறப்பட்டேன் வரும்வழியில் முதலி காமியை கடையில் சந்தித்தேன் அவர் என் கையிலுள்ள காயத்தைப் பற்றிக் கேட்டார்? நடந்தவற்றை விபரமாகச் சொன்னேன். இதைப்பற்றி நான் பொலிஸாரிடம் தெரிவிக்கவில்லை நான் ஏழை அதோடு பதினறு கட்டை பிரயாணம் செய்யவேண்டும் தாமதிக்க விரும்பவில்லை பொலிஸார் என்னை வந்து வீட்டில் விசாரித்ததின் பேரில் 1-ம்தேதி பொலிஸ் நிலையத்திற்கு சென்று இன்ஸ்பெக்டர் ஹரீமிடம வாக்கு மூலம் கொடுத்தேன்

எதிரி சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. சண்முகநாதன் சீமானை குறுக்குவிசாரணை செய்தபோது தான் இதைப்பற்றி தன் மனைவியிடம் தெரிவிக்கவில்லையென்றும் இப்படிப்பட்ட விஷயங்களைத் தான் மனைவியிடம் சொல்லும் வழக்கமில்லையென்றும் கூறினர்.

(5-ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவுக்கு நீர்மூழ்கிகள்

சென்னை, பெப். 7

இந்தியக் கடற்படைத் தலைவர் ஸெஸ்அட்மிரல் பி. எஸ் சோமன் விஷேச விமான மூலம் இன்று சென்னை வந்தார். இந்திய கடற்படைக்கு சில நீர்மூழ்கிகள் வாங்க உத்தேசிக்கப்பட்டிருப்பதாய் அவர் கூறினர்.

## 12-ம் திகதி 5-வது டெஸ்ட்

சிட்னி, பெப். 7

இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையே 5-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி வருகிற 12-ம் திகதி சிட்னியில் ஆரம்பமாகும்.

## புருனிபற்றி சுல்தான்

புருனி, பெப். 7

புருனியன் சொந்தநலனுக்காக, அது மலேஷியா சம்மேளனத்தில் சேரவேண்டும் என புருனி சுல்தான் அறிவித்தார்.

## 'விஞ்ஞானிகளும் அவசியம்'

புதுடில்லி பெப். 7

இந்தியாவின் பாதுகாப்புக்கு பெரிய ஜெனரல்கள் மட்டும் போதாது என்றும் பெரிய விஞ்ஞானிகளும் தேவை என்றும் பாதுகாப்பு மந்திரி திரு. ஒய். பி. சாவன் கூறினர்.

## யாழ். மாநகரசபை
### கேள்விப்பத்திரங்கள்
**1963-ம் வருடத்தில் வீதிகளுக்கு கல்போட்டு நிரவி தார் போடுதல்**

மேற்கண்ட வேலைகளைப் பொறுப்பேற்று நிறைவேற்றுவதற்கான விண்ணப்பங்கள கோரப்படுகின்றன. முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் யாழ். மாநகரசபைக் சமிஷனரால் 1963-ம் வருடம் பெப்ரவரி 14-ந் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்

யாழ்ப்பாண மாநகரசபை மராமத்து என்ஜினியரிடமிருந்து பெறப்படும் விண்ணப்பப்பத்திரங்களில் இருவிண்ணப்பங்கள் நிரப்பப்பட்டு அனுப்பப்பட வேண்டும். இவரிடம் இதுசம்பந்தப்பட்ட சகல விபரங்களையும் தெரிந்துகொள்ளலாம்.

கேள்விப்பத்திர விண்ணப்பப்பத்திரங்கள் ரூ. 55 செலுத்தி 1963-ம் வருடம் பெப்ரவரி 13-ந் திகதி பிற்பகல் 3 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். செலுத்தப்படும் 55 ரூபாவில் 50 ரூபா தெரிவு செய்யப்படுபவருடன் ஒப்பந்தம் ஆகிய பின்னர் அவருக்கு திருப்பிக் கொடுக்கப்படும.

ஹட்சன் செல்வராஜா
சமிஷனருக்காக.

யாழ். மாநகரசபை,
31-1-63. 695

## கேள்விப்பத்திர அறிவித்தல்

பரந்தன், குமரபுரம் பல நோக்கக் கூட்டுறவுச்சங்கத்திற்கு ஒரு நெற்கிட்டங்கி கட்டுவதற்காக தென்யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் கேள்விப்பத்திரங்கள் 1963-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22-ந் திகதி காலை 12 மணிவரையும் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் அனுப்பும் உறையில் இடதுபக்க மூலையில் "நெற் கிட்டங்கிக்கான கேள்விப்பத்திரம்" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும. யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாணவங்கி (பரந்தன் கிளை)யில் ரூபா 50 கேள்விப்பத்திர வைப்புப் பணமாகக் கட்டப்பட்ட பற்றுச்சீட்டு காண்பிப்பதன்பேரில் பரந்தன் தென்யாழ்ப்பாணக் கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளர் அலுவலகத்தில் 1963-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 18-ந் திகதி காலை 10 மணிவரையும் கேள்விப்பத்திரப்படிவங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் அனுப்பப்படல் வேண்டும். கட்டிடத்தின் மாதிரிப்படத்தைத் தென்யாழ்ப்பாணக் கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளர் அலுவலகத்தில் பார்வையிடலாம். இவ்வேலையை ஏற்றுக்கொள்ளத் தகுதியுடையவர்கள் என்பதற்குப் போதிய அத்தாட்சி காண்பிப்பவர்களுக்கே இதற்குரிய பத்திரங்கள் வழங்கப்படும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரகாரர் தாம் ஒப்புக்கொண்ட ஒப்பந்தத் தொகையில் 5 வீதத்தைப் பிணைப்பணமாகக் கட்ட வேண்டும். கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்பட்ட இரண்டு வாரங்களுக்குள் வேலையைஏற்றுக் கொள்வதற்கான ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

மேலதிக விபரங்களை தென்யாழ்ப்பாணக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(ஒப்பம்) மு. சின்னத்தம்பி
தென்யாழ்ப்பாணக் கூட்டுறவு
அபிவிருத்தி உதவி
ஆணையாளர்.

கூட்டுறவு அலுவலம்,
பரந்தன்,
25-1-62. 680


**ஆசிரியருக்குக் கடிதங்கள்**

# அரசாங்கத்தின் கலால் கொள்கையும் மதுவிலக்கும்

முக்கியமான ஒரு தேசியப் பிரச்னைபற்றி அபிப்பிராயமும் யோசனையும் கூறுவதற்கு பலவேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளான எம். பி.களைக் கொண்டதொரு தெரிவுக் குழுவை அரசாங்கம் நியமித்திருப்பது இது முதற்தடவை என்றுநம்புகிறேன். நமது நாட்டின் கலால்பகுதிக் கொள்கையைத்தான் குறிப்பிடுகிறேன். முதலமைச்சர் சீனவுக்கும் இந்தியாவுக்கும் சமாதானத் தூது போய்த் திரும்பியிருக்கும் சமயமாக அவர் இப்படி ஒரு காரியம் செய்திருப்பது பொருத்தமாகவே இருக்கிறது.

கலால் கொள்கை மாதிரியான விஷயங்களில் நமக்கென்று ஒரு கொள்கையை நாம் நிர்ணயித்துக்கொள்ளு முன்பாக நமது அயல்நாடான இந்தியா அதுவிஷயத்தில் எவ்விதமனப்பான்மை கொண்டிருக்கிறதென்பதையும் தெரிந்துகொண்டால் நலம். கலால் கொள்கை சம்பந்தப்பட்டவரை இந்திய அரசாங்கம் அது சுதந்திரமடைந்த நாள் முதலே சட்டப்படியான மதுவிலக்கை அமுல்நடத்திவருகிறது.

தற்போதைய நிலையில் அமைச்சர்கள் சிலர் சீனவின் தாகுதலை உறுதி குலையாமல் எதிர்த்துநிற்க வேண்டிய ஒரு தேவைக்காக மதுவிலக்கை கைவிடவிரும்பிய போதிலும் அந்நாட்டில் மதுவிலக்கு தொடர்ந்து நடைமுறையிலிருந்துவருகிறது.

இத்துறையில் பிரிட்டன், அமெரிக்கா, சோவியத் ரஷ்யா போன்ற நாடுகளை நமது தலைவர்கள் இன்னமும் உதாரணம் காட்டிப் பேசிவருவது விந்தையாயிருக்கிறது. இந்நாடுகளின் வாழ்க்கை முறை கலாச்சாரம் என்பன நமது நாட்டு வழமைகளுக்கு முரண்பட்டதாயிருப்பதுடன் இத்தேசங்களின் சுவாத்தியநிலையும நமக்கு முற்றும் வேறுபட்டதாக இருக்கிறது. இதனை நமது தலைவர்கள் மறந்துவிடுகிருர்கள்.

எங்கள் நாட்டில் இன்றெல்லாம் நடைபெற்றுவரும் பெரும்பாலான கொலைக்குற்றங்களுக்கும் குடும்பச் சண்டைகளுக்கும் குடிப்பழக்கமே முழுமுதல் காரணமாயிருந்து வருகிறது. கிராமப்பகுதிகளில் இந்நிலை இன்னும் மோசமாகியிருக்கிறது. களளத்தனமாக சாராயம் காய்ச்சி விற்போருக்கு கிராமங்களில் செல்வாக்கு அதிகம். அதனுல்தான் அங்கெல்லர்ம் நிலைமை அப்படியாகியிருக்கிறது. கிராம மக்கள் சமுதாயத்தின்முதுசெலும்பாக இருப்பதாகக் கூறிக்கொள்ளும் இன்றைய அரசாங்கம் இந்த கலால் கொள்கை நிர்ணய விஷயத்தை சாமர்த்தியமாக ஒரு தெரிவுக்குழுவிடம் ஒப்படைத்திருக்கிறது. தெரிவுக் குழு முடிவாக என்ன அபிப்பிராயம் கூறுமென்பது அதற்கு நன்ருகத் தெரியும்.

அம்மையார் ஒருவர் தலைமை தாங்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி மதுவிலக்கை என்றைக்கும் தீவிரமாக ஆதரித்துவரும். திரு. டட்லி சேனநாயக்கா தலைமை தாங்கும் ஐக்கிய தேசியக் கட்சி, ஏழை பங்காளர் எனத் தங்களைக் கூறிக்கொள்ளும் மார்க்ஸிய வாதிகளான டாக்டர் என். எம். பெரேரா, திரு. பீட்டர் கெனமன், திரு. பிலிப் குணவர்த்தன ஆகியோர் தலைமை தாங்கும் ஏனைய கட்சிகள் காந்தஜி தோற்றுவித்த சத்தியாக்கிரகத்தை தனது ஒரே போராட்ட ஆயுதமாகக் கைக்கொண்ட நமது தமிழரசுக் கட்சி ஆகிய இத்தனையும் அகில இந்தியாவும் ஏற்றுக் கொண்டிருககும் மதுவிலக்கைத் தொட்டுக்கொள்வதற்கு சும்மா பின் நிற்பது துக்கப்பட வேண்டிய சங்கதியாகும். நமது நாட்டில் ஏற்பட்டிருக்கும் இந்த பரிதாப நிலைககு என்ன காரணம்சொல்லி அழுவது? நாமெல்லாம் ஓர் அர்த்தமற்ற வாழ்க்கை நடத்திக் கொண்டு வருவதையே இது புலப்படுத்துவதாயுள்ளது. இன்னமும் மேற்கத்தியதேச நாகரிகத்தையே நாம் பின்பற்றி வருகிறேம். நமது இன்றைய வாலிப சமுதாயத்தினருக்கு ஒரு சரியான பாதை காட்டும் தலைமைப்பொறுப்பு நம்மையே சார்ந்திருக்கிறது. அநீதப்பாதையில்தான அவர்கள் தங்கள் வருங்காலத்தை வகுத்தமைக்க முடியும். தலைவர்கள் என்றிருப்பவர்கள் பொதுமக்கள் சாராயம் குடிக்க விரும்பினுல் அவர்களது அந்த விருப்பத்துக்கு நாம் குறுக்கேநிற்கக்கூடாது என்ற மாதிரி அபிப்பிராயம் கூறத் தலைப்படுவார்களாயின் அப்பொழுது இளைஞர்களிடமிருந்து, நமது வாலிப சமுதாயத்திடமிருந்து நல்லபடியாக நாம் எதையும் எதிர்பார்க்க முடியுமென்று தோன்றவில்லை.

தேசியக்கல்வி, இலவச சுகாதாரசேவை, தேசிய பஸ் சேவை, தேசிய வங்கி என்று இப்படிப் பல நல்லநோக்கங்களில் நமது இன்றைய அரசாங்கம் காலவைத்திருக்கிறது. மதுவிலக்கும் ஒரு நல்ல நோக்கமே. அதன் பேரில் 'வோட்' சேகரிக்க முடியாதென்பது மெய்யாக இருக்கக்கூடும்.

சட்டவிரோதமாக சாராயம் காய்ச்சும் கசிப்பு முதலாளிகளின் ஆதரவை அரசாங்கம் இழந்துவிடவும் கூடும்.

இருந்தாலும், நமது முதலமைச்சருக்கு சமாதான நோபல் பரிசு வழங்கப்படுவதற்கான ஒரு பெருமை அவரை நோக்கி உதயமாகிக் கொண்டிருப்பதாகப் பேசப்பட்டுவரும் இந்நாளில் இலங்கை அரசாங்கம் நமது இந்த சிறியநாட்டில் மதுவிலக்கை ஏற்படுத்துவதற்கு முனையுமானல் அதுமேலும் பெருமையே தருவதாகும்.

டி. விசுவநாதன்.


## தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்றலோக இனும். தொய்வுககு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணுநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.



## பாலபண்டித, பண்டித வகுப்புக்கள்

யா. ஆ. தி. பா. சங்கத்தால் வைத்தீஸ்வர வித்தியாலயத்திலே நடத்தப்படும் பாலபண்டித, பண்டித வகுப்புக்கள், 2-3-63 சனிக்கிழமை 8 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலே நடைபெறும். அனுபவமுந் திறமையுமுள்ள ஆசிரியர்கள் கற்பிப்பார்கள். வகுப்பிலே சேர்ந்து படிக்க விரும்புவோர் 2-3-63 சனிக்கிழமைக்கு முன்பு காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவேண்டும்.

கல்விக்கந்தோர்,
யாழ்ப்பாணம்.
6-2-63.

ஆர். எஸ். பார்மர்,
காரியதரிசி,
யா. ஆ. தி. பா. சங்கம்.
696


# 'ஆசிரிய சேவை கமிஷன் வேண்டும்'
## ஆசிரியர் சங்கம் கோரும்

யாழ்ப்பாணம், வெள்ளி

"ஆசிரியர்களின் நியமனம், மாற்றம், பதவியுயர்ச்சி ஆதியவை உட்பட கல்வி சம்பந்தமான சகல விஷயங்களையும் நிர்வகிக்க ஆசிரிய சேவைக் கமிஷன் நியமிக்கவேண்டும்" என்னும் தீர்மானம் வடஇலங்கைத் தமிழாசிரியர் சங்க வருடாந்தக் கூட்டத்தில் கொண்டு வரப்படவிருக்கிறது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நாளைக் காலை நடைபெறவிருக்கும் ஆசிரிய சங்கத்தின் முப்பத்தொன்பதாவது வருடாந்தக் கூட்டத்தில் 16 பிரேரணைகள் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றன. அவற்றுட் சில வருமாறு:-

வில்மட் பெரேரா கமிஷன் சம்பள அறிக்கையை விரைவில் நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும்.

தமிழாசிரியர்களின் சம்பளப் படியேற்றம், சேவை நீடிப்பு, நியமனத்தை உறுதிப்படுத்துதல் என்பனவற்றை சிங்கள மொழித் தேர்வின்மைக்காகத் தடைப்படுத்துதல் மனித உரிமைக்கே மாறுனது. தமது பணியைத் தகுதியாகச் செய்யும் தமிழாசிரியர் எவர்க்கும் இவை காலதாமதமின்றி வழங்கப்படவேண்டும்.

ஆசிரியர்களின் மாற்றச் சபைகளில் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுக்கு இடமளிக்கப்படவேண்டும்.

சகல பாடசாலைகளும் சுவீகரிக்கப்படுவதற்கு முன்னர் ஆசிரியர்களுக்கு இருந்துவந்த அரசியலுரிமை தொடர்ந்தும் இருத்தல்வேண்டும்.

பயிற்றப்பட்டு வெளியேறிய வேலையற்ற ஆசிரியர்களுக்கு உடனடியாக வேலை கொடுக்க வேண்டும்.

தொழில் வழிகாட்டு ஆசிரியர்களுக்கு ஒரு சம்பளத் திட்டம் வகுக்கப்படவேண்டும் அல்லது விசேட படியேற்றம் கொடுக்கப்படவேண்டும்.

உயர்தர வகுப்புகளிற் கற்பிக்கும் பண்டிதர், வித்துவான், புலவர்களுக்குப் பட்டதாரிச் சம்பளம் வழங்கப்படவேண்டும்.

## இமயமலையும் இந்தியாவும்

கிறிஸ்துவுக்குமுன் 2000 ஆண்டுகளுக்கு முதல், ஆரியர் வடக்கே குடியேறுவதற்கு வெகுகாலத்துக்கு முன்பாகவே இமாலயபர்வதமானது கண்ணை இமை காப்பது போல் இந்தியாவை அரண்படுத்தி நிற்பதோடு அதன் வடபாக எல்லைக்கல்லாகவும் இருந்து வந்திருக்கிறது. ஆரியருக்கு முன்னுக இங்கெல்லாம் வசித்த திராவிட இனம் இதற்கு வேங்கடம் என் பெயரிட்டு அழைத்து வந்தார்களென்று பிதா ஹெரஸ் கூறியிருக்கிருர். வெண்கோட்டம் நாளடைவில் வேங்கடமாயிருக்கலாம். எப்படியாலுைம், வென்ய்ங்கிரி என்பது அதற்குப் பொருளாகும். வெண்பனி உறைந்த இம் மலைவரை சிவனின் வசிப்பிடமென்று இந்துக்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். இந்தியாவுக்கு அதன் இமையும் புருவமுமாக அந்நாட்டின் வடஎல்லையில் பூமிக்கும் வானத்துக்கும் நடுவே நீண்டு கிடக்கும் மலைத்தொடருக்கு இதைவிடப்பொருத்தமான வேறு பெயர் இருக்கமுடியாது.

இந்திய-சீன சண்டை பற்றி இலங்கையில் கூடிய குட்டி உச்சி மகாநாட்டினரிடம் இமயகிரியின் வரலாற்றை விவரித்துக் கூறி, இந்தியா மீது சீன நடத்திய தாக்குதலானது மனிதனுக்கும் இயற்கைக்கும் தெய்வததுக்குமே அடுக்காத பாதகச் செயல் என்பதைத் தெளிவு படுத்தியிருந்தால் அவர்கள் கம்யூனிஸ்ட் சீனவிடம் அதைச் சொல்லியிருப்பார்கள் அல்லவா?

இந்திய எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசித்து அட்டூழியம் செய்ததெல்லாம் போற்றுதற்குரிய ஒரு பழமைக்கும் வணக்கத்துக்குரிய ஒரு புனித சின்னத்துக்கும் தர்மத்துக்கும் எத்தகைய பாவமான காரியம் என்பதை கம்யூனிஸ்ட் சீன இப்பொழுது சற்றேனும் சிந்தித்துப்பார்க்காதா?

மனிதகுலம் பொதுவாக பழமைக்கும் தூய்மைக்கும் தர்மத்துக்கும் தரும் பெரும் மதிப்பையும் உண்மையான வணக்கத்தையுமே பாழ்படுத்திவிட்டதாக சீன ஒரு நிமிடமாவது எண்ணி இது பற்றிச் சிந்திக்க ஒரு சந்தர்ப்பம் இப்பொழுது ஏற்படுமல்லவா?

என். டி. குணசேகரம்.

## 16-வது கன்றை ஈன்றது

கீல் (மேற்கு ஜெர்மன்), பெப். 7

மேற்கு ஜெர்மனியின் அதிக வயதுடைய பசு என்று கருதப்படும் 19 வயதுடைய ஒரு பசு, 16-வது கன்றை ஈன்றுள்ளது! பெக்மார்னிலுள்ள பால்டிக் தீவிலுள்ள பண்ணையொன்றில் இப்பசு தனது 16-வது கன்றை ஈன்றுள்ளது.

## விவேகானந்தர் ஜயந்தி விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் — கந்தர்மடம் சனசமூகநிலையம் விவேகானந்தர் நூற்றுண்டு விழாவையொட்டி கட்டுரைப் போட்டியொன்று நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளது. விவேகானந்தர் பற்றிய இக் கட்டுரைப் போட்டியின் முடிவு திகதி இம்மாதம் 15-ம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 20-ம் திகதி நடைபெறவிருக்கும் விவேகானந்தர் விழாவில் பரிசுகள் வழங்கப்படுமென அறிவிக்கப்படுகிறது

## புதிய நீதிமன்றம்

கொழும்பு, வியாழன்

மோட்டார் போக்குவரத்து வழக்குகளை விசாரணை செய்வதற்காக கொழும்பில் ஒரு நீதிமன்றம் விரைவில் நிறுவப்படவிருக்கிறது. இந்த நீதிமன்றத்தில் மோட்டார்போக்குவரத்து வழக்குகள் மட்டுமே விசாரணை செய்யப்படும்.

இந்த நீதிமன்றம் நிறுவப்படுவது சம்பந்தமாக நீதி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. டி. ஜே. ஆர். குணவர்த்தன, கொழும்பு பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஐ. டி. எம். வான்டுவெஸ்ட் ஆகியோர் எச்லன் சதுக்கத்திலுள்ள கூட்டு மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்கும் லெயிடன் பஸ்தியன் வீதியிலுள்ள சுங்க கட்டடத்துக்கும் நேற்று விஜயம் செய்தனர்.

கூட்டு மாஜிஸ்டிரேட் கோர்ட் கஸ்டம்ஸ் கட்டிடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டு புதிய 'போக்குவரத்து விசாரணைக் கோர்ட்' எச்சலன் சதுக்கத்தில் நிறுவப்படும் என்றும் சுங்க அதிகாரிகள் வேறு இடத்துக்கு மாற்றப்படுவார்கள் என்றும் தெரியவருகிறது.

# சீனுவுக்கு ஆறு நாடுகள் மீண்டும் கோரிக்கை

## கொழும்பு யோசனையை முழுமையாக ஏற்பதற்கு!

கெய்ரோ, பெப். 7

இந்திய—சீன எல்லைப் பிரச்னைக்கு சமாதானத்தீர்வு காணுமுகமாக கொழும்பு மகாநாடு தெரிவித்தயோசனையை சீனு அப்படியே ஏற்றுக்கொள்ள மறுப்பதால் கொழும்பு மகாநாட்டில் கலந்துகொண்ட ஆறு ஆசிய—ஆபிரிக்க நடுநிலைமை நாடுகளும் அடுத்துஎடுக்கும் நடவடிக்கைபற்றி தீவிரமாக ஆராய்ந்து வருவதாகத் தெரியவருகிறது.

### கூட்டாக கேட்டுக்கொள்ளும்

கொழும்பு மகாநாட்டு யோசனையை கூட்டாக அப்படியே ஏற்றுக்கொள்ளுமாறு கொழும்பு மகாநாட்டு ஆறுநாடுகளும் சீனுவைக் கூட்டாகக் கேட்டுக்கொள்ளவிருப்பதாக அறியப்படுகிறது.

### இந்தியாவின் நிலை

கொழும்பு மகாநாட்டுயோசனைகளையும் அதற்கு இலங்கை, கானு, ஐக்கிய அரபுக் குடியரசு ஆகிய மூன்று நாடுகளும் தெரிவித்த விளக்கங்களையும் இந்தியா அப்படியே முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளதென்றும் மகாநாட்டு யோசனைகளை சீனு அப்படியே முழுமையாக ஏற்றுக்கொள்ளாதவரை சீனவுடன் நேரடிப் பேச்சுவார்தை என்ற பேச்சுக்கே இடமில்லையென்றும் இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரியொருவர் நேற்று புதுடில்லியில் மீண்டும் விளக்கிக்கூறினர். கொழும்பு மகாநாட்டு யோசனைகளை சீனு முழுமையாக ஏற்றுக்கொள்ளாதவரை நேரடிப் பேச்சுவார்த்தைக்கு இடமில்லையென்பதை சம்பந்தப்பட்டவர்களுக்கு இந்தியா திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டது என்று அந்த அதிகாரி கூறினர்.

### கைதானவர் பட்டியல்

எல்லைச் சண்டையில் கைதுசெய்யப்பட்ட இந்திய சிப்பாய்களின் புதிய பெயர்ப் பட்டியல் ஒன்றை சீனு செஞ்சிலுவைச் சங்கம் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அனுப்பியுள்ளது. இந்தப் பட்டியலில் 453 பெயர்கள் உள்ளன. இதுவரை சீனுவிலிருந்து 1131 கைதிகளின் பெயர் விபரங்கள் கிடைத்துள்ளன.

### பொம்டிலா விபத்தில் பலி

வடகிழக்கு எல்லைப்பகுதியில் சிவில்நிர்வாக வேலைகள் சம்பந்தமாக மேற்பார்வை செய்வதற்கு 'ஜீப்' வண்டியொன்றில் சென்ற என்ஜினியர் எம். ஜி. ரெட்டியும் மற்றும் மூவரும் ஒருவிபத்தில்சிக்கி மாண்டனர். இவர்கள்சென்ற 'ஜீப்' வண்டி ஒருபாறையில் மோதி பள்ளத்தாக்கில் விழுந்தது. இவர்களுடன் சென்ற மற்றும் மூவர் காயங்களுடன் உயிர்தப்பினர்.

---

## சிலாசனக்கல்லில் உள்ள தமிழ் வாக்கியங்கள் என்ன?

### ஏழு வருடங்களாகியும் தகவல் இல்லை

திருக்கோணமலை, வியாழன்

மாங்கனய் ஐயங்குடா குளத்திற்கு அருகாமையிலுள்ள வயலொன்றில் கண்டெடுக்கப்பட்ட பத்தாம் நூற்றூண்டினைச் சேர்ந்த சிலாசனக் கல்லில் பொறிக்கப்பட்டிருக்கும் தமிழ் எழுத்துக்கள் சம்பந்தமாக இதுவரை எந்தவிபரமும் அறிவிக்கப்படவில்லை!

1955-ம் ஆண்டில் சில கமக்காரர்களினுல் கண்டெடுக்கப்பட்ட இச் சிலாசனக் கல், திருக்கோணமலை எம். பி. திரு. இராஜவரோதயம் மூலம் அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டு பின்னர் அநுாரதபுரம் நூதனசாலைக்கு அனுப்பப்பட்டது. சிலாசனக் கல்லில் பொறிக்கப்பட்டிருக்கும் தமிழ் வாக்கியங்கள் என்ன என்பதை அறியும் முகமாக சாம்பல்தீவு கிராமசபைத் தலைவர் திரு. வ. நா. தம்பிராசா புதைபொருள் ஆராய்ச்சி அதிகாரியுடன் தொடர்பு கொண்டிருந்தார். இதுசம்பந்தமாக இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. கணபதிப் பிள்ளையுடன் தொடர்புகொள்ளும்படி திரு. தம்பிராசாவுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனுல் இன்றுவரை இச்சிலாசனக் கல்லில் பொறிக்கப்பட்டிருக்கும் தமிழ் வாக்கியங்கள் குறித்து எவ்வித தகவலும் அறிவிக்கப்படவில்லை. இக்கல்லை திருமலை கோணநாயகராலயச் சபையாரிடம் ஒப்படைக்கும்படி சாம்பல்தீவு மக்கள் கேட்டிருக்கின்றனரெனத் தெரியவருகிறது.

---

### எல்லை தாண்டிய சீனப்படை கிராமங்களில்நடத்திய 'தர்பார்'

தேஸ்பூர், பெப். 4

தவாங் பகுதியைச் சேர்ந்த மோன்பா சிறுவன் ஒருவனைச் சீனர்கள் கடத்திச்சென்றுருப்பதாகவும் தம்வசப்படுத்தித் தங்கள் கொள்கைகளைப் புகுத்துவதற்காக அவனைப் பீகிங்கிற்கு அனுப்பியிருப்பதாகவும் செய்தி கிடைத்திருக்கிறது. இந்தயச் சிறுவன் தவாங்கிலிருந்து இரண்டுசைல் தொலைவிலுள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்தவன். சீனர்கள் அண்மையில் தவாங்கிலிருந்து வெளியேறும்போது இம்மாதிரிக் கொடுமையான நடவடிக்கைகளிலும ஈடுபட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. சீனர் இங்கு தங்கியிருந்த 3 மாத காலத்தில் தங்களுடன் ஒத்துழைக்க மறுத்த 10 மோன்பா மக்களை அவர்கள் சுட்டுக்கொன்றிருக்கிருர்கள். தக்லா மலைத்தொடரில் இந்தியப் படைக்கு உதவிய மோன்பா ஒருவரையும் அவர்கள் பிடித்துச் சென்று சுட்டுக் கொன்றனர். நேபா அரசாங்கம் இந்த மோன்பாவின் மனைவிக்குப் பரிசு அளித்துள்ளது. தவாங்—பம்லா மார்க்கத்தில் 15 மைல் நீளமான ஒரு பாதை அமைக்கும்வேலையில் மோன்பா மக்களை ஈடுபடுத்த சீனர் செய்த முயற்சி காமெஸ் பிரிவில் பலிக்கவில்லை.

### கிரீஸ் மன்னர் அன்பளிப்பு

புதுடில்லி, பெப். 6

கிரீஸ் மன்னர் தம்பதிகள் இன்று மாணவிகளின் உடற்பயிற்சி நிகழ்ச்சி ஒன்றைபார்வையிட்டனர். 4000மாணவிகள் இதில் கலந்து கொண்டனர். கிரேக்க மன்னரின் சார்பாக 1000 கம்பளி உடைகள் துருப்புக்களுக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது.

### கெடட் படை 8 லட்சமாகும்

புதுடில்லி, பெப். 7

தேசிய கெடட்படையினரின் எண்ணிக்கையை 4 லட்சத்திலிருந்து 8 லட்சமாக உயர்த்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அடுத்த ஜுலை மாதத்திற்குள் இது உயர்த்தப்படும் இதற்கிடையில் நாடெங்கும் மாணவர்கள் உற்சாகத்துடன் இப்படையில் சேருவதாயும் பணமும், இரத்தமும் அளிப்பதாயும்அறிவிக்கப்படுகிறது. மாணவிகளும் துருப்பினருக்காக பின்னல்வேலை, நர்ஸ்தொழில் காண்டீன் நடத்துதல் ஆகிய வேலைகளைச் செய்துவருகிருர்கள்.

### தென்கொரிய மந்திரிசபை

ஸியோல், பெப். 7

தென்கொரிய மந்திரிசபை மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது.

---

## இந்தியா-பாகிஸ்தான் பேச்சுவார்த்தை இன்று கராச்சியில் ஆரம்பம்

புதுடில்லி, பெப். 7

காஷ்மீர் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட பிரச்னைகளுக்கு சமாதானத் தீர்வுகாணுமுகமாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் மந்திரிகள் கட்டத்தில் சென்ற மாதம் ஆரம்பமான பேச்சுவார்த்தைகளின் மூன்ருவது சுற்றுப் பேச்சுவார்த்தை நாளை கராச்சியில் ஆரம்பமாகவிருக்கிறது.

முதலிரண்டு பேச்சுவார்த்தைகளும் ராவல்பிண்டியிலும் புதுடில்லியிலும் நடைபெற்றன. மூன்ருவது சுற்றுப்பேச்சுவார்த்தைகளில் நாளை கலந்துகொள்வதற்காக இந்தியக் கோஷ்டியின் தலைவர் ரயில்வே மந்திரி திரு. சுவர்ண் சிங் இன்று கராச்சிக்குப் பிரயாணமானுர். புதுடில்லியிலிருந்து புறப்படுமுன் அவர் பிரதமர் நேருவுடன் ஆலோசனை நடத்தினுர்.

பாகிஸ்தான் கோஷ்டியின் தலைவர் மந்திரி புட்டோ ராவல்பிண்டியிலிருந்து கராச்சிக்குச் சென்றுள்ளார்.

### 'தூய தமிழ் வேண்டும்'

#### குன்றக்குடி அடிகளார் வற்புறுத்தல்

அறந்தாங்கி, பெப். 6

தமிழில் கலப்படம் செய்பவர்கள்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்து அவர்களுக்குச் சிறைத்தண்டனை விதிக்க வேண்டும் என்று குன்றக்குடி அடிகளார் யோசனை தெரிவித்துள்ளார்.

அறந்தாங்கியை அடுத்த கீழமங்கலம் தமிழ்ப் பேராடத்தின் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் 'தமிழரின் கடமை' என்ற தலைப்பில் குன்றக்குடி அடிகளார் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

'தூய தமிழில் எழுதுவதனையும் பேசுவதனையும் தமிழர்கள் கடமையாகக் கொள்ளவேண்டும். தமிழில் கலப்படம் செய்பவர்கள்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்து அவர்களுக்குச் சிறைத் தண்டனை அளிக்க வேண்டும். தமிழர்களை ஒரே குடும்பத்தினராக ஒன்றுசேர்க்கவேண்டும்.

பசும் புல் தரையில் பாம்பு நுழைந்துவருவதுபோல் நமக்குள்ளே பகைவர்கள் இருந்து நம் தமிழை அளிக்கமுயலுகின்றனர். முதலில் அவர்களைக் கண்டுபிடித்து ஒழிக்கவேண்டும்.'

கூட்டத்திற்கு திரு. ஒப்பிலாமணி தலைமைவகித்தார். மற்றும் பலர் பேசினர்.

### அடினேர்

பொன், பெப். 6

மேற்கு ஜெர்மன் அதிபர் அடினேர் விடுத்துள்ள கொள்கை அறிக்கையில் ஐரோப்பிய பொது மார்க்கெட்டில் பிரிட்டன் சேரும் பேச்சு முற்ருக முறிந்துவிடவில்லை எனக் கூறினர். "பிரஸல்ஸில் நடைபெற்ற சம்பவம் துக்ககரமானது. மோசமானது. ஆனுல் அது பரிகாரம் காண முடியாததல்ல. பிரிட்டன் சேரும் விஷயத்தில் உதவியளிக்க மேற்கு ஜெர்மனி திடம் கொண்டிருக்கிறது" எனவும் அவர் கூறினர்.

### ரஷ்ய கோரிக்கை ஜாப். நிராகரிப்பு

டோக்கியோ, பெப். 6

அமெரிக்க அணுசக்தி நீர்மூழ்கிகளை ஜப்பானிய துறைமுகங்களில் அனுமதிக்காமலிருக்கும்படி சோவியத் ரஷ்யா விடுத்த ஒரு கோரிக்கையை ஜப்பானிய அரசாங்கம் நிராகரித்து விட்டது. அமெரிக்க 7-ம் படையைச் சேர்ந்த நீர்மூழ்கிகளே ஜப்பானியத் துறைகளில் அனுமதிக்கப்படுகின்றன என்றும், அவை அணுசக்தி நீர்முழ்கிகளல்ல என்றும் அது கூறியது.

ஆனுல் போலாரிஸ் ஏவாயுதங்களைக் கொண்ட அமெரிக்க நீர்மூழ்கிகள் ஜப்பானிய துறைமுகங்களில் அனுமதிக்கப்படமாட்டாது. என ஜப்பானியப் பிரதமர் அறிவித்தார்.

### கனடா பார்லிமெண்ட் கலைக்கப்பட்டது

ஒட்டாவா, பெப். 7

கனடா பார்லிமெண்ட் கலைக்கப்பட்டுவிட்டது. புதிய பொதுத் தேர்தல் ஏப்ரல் 8-ந் திகதி நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு டீபன் பேக்கர் தலைமையிலுள்ள கன்ஸர்வேட்டிவ் அரசாங்கத்தின்மீது எதிர்க் கட்சியினர் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறியதைத் தொடர்ந்து பிரதமர் டீபன் பேக்கர் கவர்னர் ஜெனரலுடன் ஆலோசனை நடத்தினுர். இதன் பின்னர் பார்லிமெண்டைக் கலைத்து தேர்தல் நடைபெறும் திகதியையும் அறிவித்தார்.

### நோக்கம் நிறைவேறியது

#### காங்கோ பற்றி யுதாண்ட்

நியுயோர்க், பெப். 7

காங்கோவில் ஐ. நா. வின் நோக்கம் நிறைவேறிவிட்டதென்று ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் பாதுகாப்புச் சபையில் தெரிவித்துள்ளார்.

நோக்கம் நிறைவேறிவிட்டாலும் இன்னும் சிறிது காலத்துக்கு கவனமாக இருக்க வேண்டியது அவசிய மென்றும் காங்கோவிலுள்ள ஐ. நா. படையின் துருப்புக்கள் அடுத்த மாத இறுதியிலிருந்து சிறிது சிறிதாக அங்கிருந்து வெளியேற்றப்படும் என்றும் யுதாண்ட் தெரிவித்துள்ளார்.

காங்கோவில் உள்நாட்டு யுத்தத்தை ஐ. நா. தடுத்தது மட்டுமல்ல காங்கோவின் பிராந்திய ஒருமைப் பாட்டையும் சுதந்திரத்தையும் பாதுகாத்துள்ளதென்றும் யுதாண்ட் தெரிவித்துள்ளார்.

### நொரடம் பீக்கிங் விஜயம்

பீக்கிங், பெப் 7.

கம்போடிய பிரதமர் இளவரசர் நொரடம் சிகானுக் இம்மா தமத்தியில் சீனுவுக்கு விஜயம்செய்வாரென்று நவசீன செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

### மணி வாக்கு

நாமெல்லாம் ஒருவிதத்தில் திருடர் என்றே கூறுவேன். எனது உடனடி பாவிப்புக்குத் தேவையில்லாத எதையும் நான் எடுத்து வைத்துக்கொண்டால், அதை யாரிடமிருந்தோ நான் திருடியவனேயாவேன். அவ்வப்போது நமக்குத் தேவையானதை இயற்கை அன்னை அளிக்கிருள். ஒவ்வொருவரும் தமக்கு வேண்டியதை மட்டும் எடுத்துக்கொண்டால் உலகில் வறுமையோ அன்றி பட்டினிச் சாவோ இராது.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு தை மீ 26உ (8-2-63)

## பார்லிமெண்டுக்கு அவமதிப்பு

சென்ற புதன்கிழமையன்று இலங்கை பார்லிமெண்ட்சபையிலே கேள்விநேரத்தின் போது மந்திரிகள் ஒருவர் கூட சமுகம் அளிக்காததால் அதை ஆட்சேபித்து கூட்டத்தை ஒத்திவைத்துவிட்டனர். இது மந்திரிகளுக்கு நல்ல சூடாக இருந்து, இனி அவர்கள் சபையை இப்படி அவமதிக்காமல் தடுக்குமென்றே நம்புவோம்.

இதற்குமுன் பலதடவைகளில் அமைச்சர்கள் இவ்விதமே சபைக்கு வராமல் இருந்திருக்கிருர்கள். இதை எதிர்க்கட்சித்தலைவர்கள் பன்முறை பலமாக ஆட்சேபித்தும்கூட, மந்திரிகள் திருந்தவில்லை. விவாத காலத்தைவிட, கேள்விநேரம் அதிக முக்கியமானது. பொதுமக்களைப் பாதிக்கும் பல முக்கிய நிர்வாக விஷயங்களைப் பற்றி, பிரதிநிதிகள் கேள்விகளைக் கேட்பதும் அதற்கு மந்திரிகள் பதிலளிப்பதும் ஜனநாயக ஆட்சியின் சிறந்த அம்சங்களிலொன்று. முன்கூட்டி பல வாரங்களுக்கு முன்பே இக்கேள்விகளுக்கு முன்அறிவித்தல் கொடுத்து அவற்றை அச்சிடுவதால், பதில் அறிந்து வெளியிட, மந்திரிகளுக்கு அதிக அவகாசமுண்டு. கேள்விகள் கேட்கப்பட இருப்பதை அறிந்தும், சபைக்கு அச்சமயம் மந்திரிகளில் ஒருவர்கூட வராமல் இருப்பது சபையையும் ஜனநாயகத்தையுமே அவமதிப்பதாகுமென்பதில் சந்தேகமில்லை.

இதைப்பற்றி எதிர்க்கட்சி மெம்பர்கள் அனைவரும் ஏகோபித்து ஆட்சேபித்ததும் கோரம் இருந்தும் கூட், தலைமை வகித்த உபதலைவர் சபைக்கூட்டத்தை ஒத்திவைத்ததற்காக அவரைப் பாராட்ட வேண்டும். ஒத்திவைத்து மெம்பர்கள் கலையும்போது, சபைமுதல்வரான திரு.ஸி. பி. டி' ஸில்வா சபைக்குள் நுழைந்தாராம். திடீரெனச் சபை ஒத்திவைக்கப்பட்டதைக் கண்டு அவரும் அரசாங்கக்கட்சியும் சற்றேதிகைத்திருக்கக்கூடும். இனியாவது மந்திரிகள் பார்லிமெண்ட் சபைக் கூட்டத்தை அலட்சியம் செய்யாமல் அங்கு பிரசன்னமாகி இருக்க வேண்டுமென்பதை அவர்களுக்கு இந்த நடவடிக்கை பலமாக உணர்த்த வேண்டும்.

மந்திரிகளுக்கு பலபல அவசர அலுவல்கள் இருக்கக்கூடும். என்ருலும் பார்லிமெண்ட் சபைக் கூட்டத்துக்கு எதிர்க்கட்சியினர் கூறும் குற்றங்குறைகளைக் கவனித்து, அவற்றுக்குத் தக்க சமாதானம் கூற வேண்டிய கடமை மந்திரிகளுக்கு அதிகமுண்டு. பார்லிமெண்ட் காரியதரிசிகளால் இந்தக் கடமையைச் சரிவர நிறைவேற்ற முடியாது. மந்திரிகளின் கவனத்துக்குக் கொண்டுவருவதாக உபகேள்விகளுக்குப் அக்காரியதசிகள் பதிலளிப்பது அதிருப்தியானதும், ஆத்திரமூட்டக்கூடியதுமாகும். மேலும் கேட்கப்படும் ஒவ்வொரு கேள்விக்கும் பொதுப்பணத்திலிருந்து கணிசமான தொகை செலவாவதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் ஜனநாயக இளம்பயிர் நன்கு வளரவேண்டுமானல், இங்கு சர்வாதிகார மனப்பான்மை வளராமல் தடுக்கப்பட வேண்டுமானல், பார்லிமெண்ட் சபையை பிரதமரும், மந்திரிகளும் அதிகம் மதித்து, அதன் கௌரவத்தைக் காக்க வேண்டும். இச்சபையில் பிரதமர் இல்லாதது பெரும் குறை. அதனுல்தான் இவ்வித நிலைமை அடிக்கடி ஏற்படுகிறது போலும். பிரதமர் வர முடியாத நிலையில் மற்ற மந்திரிகளின் பொறுப்பும் கடமையும் அதிகமாகும். ஆகவே பிரதமர் இவ்விஷயமாக உடன் கவனமெடுத்து இவ்வித அவலமான நிலைமை மீண்டும் ஏற்படாமல் தடுப்பாரென்று எதிர்பார்ப்பது மிகையல்ல.

## 'ஆண்டவனை அன்னையாக மதித்தார்'

தொல்புரம், வியாழன்

"சுவாமி விவேகானந்தர் கடவுளை அன்னையாக மதித்து வழிபட்டுவந்தார். இவ்வித வழிபட்டினுல் மட்டுமே கடவுளை அடையலாம் என்பது சுவாமியின் தளராத நம்பிக்கையாகும்".

தொல்பரம் மத்திய சனசமூக நிலைய வாசிகசாலையின் ஆதரவின் கீழ், தொல்புரம் அமெரிக்கமிஷன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற சுவாமி விவேகானத்தர் விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசிய திரு. சோ. கிருஷ்ணர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை ஆசிரியர் திரு. கா. சின்னத்துரை, தொல்புரம் மத்திய சனசிமூகநிலைய காரியதரிசி திரு. சி. வரதராசத ஆகியோரும் பேசினர்.

## தேர்தலை ஒத்திவைக்க கோரிக்கை

சாவகச்சேரி, வியாழன்

சாவகச்சேரி பட்டினசபையின் தேர்தலை இவ்வருடம் ஜூன் மாதத்திலிருந்து டிசம்பர் மாதத்துக்கு ஒத்திவைக்கும்படிஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று பட்டினசபைக கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

# சிந்தனையினுல்தான் உயர்த்தஅனுபவம் கிடைக்கும்

## உதவி வித்தியாதிபதி கருத்து

யாழ்ப்பாணம், வெள்ளி

'மாணவர்கள் அனைவரும் உயர்ந்த கல்வி பெறவேண்டும். கல்வி கற்றதுடனதுமயாது சிந்தனை செய்யவேண்டும். சிந்தனையின் முடிவிலே தான் உயர்ந்த அனுபவம் உண்டாகும். வாழ்க்கையில் ஒருவன் பெற்ற கல்வியைரீ சாதனையாக்கவேண்டும்' என்று வடபெரும்பாக உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் நேற்றுக் காலை வண்ணர்பண்ணை நாவலர் வித்தியாசாலையில் பண்டித வகுப்புக்களை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் தெரிவித்தாவது:

மாணவர்கள் தமிழ் இலக்கியங்களைப் படிப்பதில் அதிக சிரத்தை எடுக்கவேண்டும். தமிழ் மொழியில் பாண்டித்தியமடைய வட மொழிக் கல்வியும் துணை செய்யும். பல மொழி இலக்கியங்களைப் படிப்பதில் மாணவர்கள் ஆர்வமுடையவர்களாக இருத்தல் வேண்டும். எந்த மொழியைக் கற்ருலும் அம் மொழியில் ஆராய்ச்சி வேண்டும். ஆராய்ச்சிக்கு சிந்தனை நன்று. சிந்தனையை மலரவைக்கவேண்டும். உயர்ந்த எண்ணங்களும் அனுபவங்களும் உருவாகின்றபோது தானுகவே சிந்தனை உண்டாகும்.

உயர்ந்த கல்வி பெறும் போது இடையூறுகள் ஏற்படுதல் இயல்பு. எதிர்ப்புக்களைக் கடந்து உயர்ந்த கல்வியைப் பெற வேண்டும். அறிவு எல்லையில்லாமல் வளரும். அறிவு வளரவளர அனுபவம்பெருகும். வாழ்க்கை உயர்ந்த நிலையில் புனிதமடைய வேண்டும். உயர்ந்த இலட்சியங்களை அடைய சிந்தனை வலுவடைய வேண்டும்.

நாவலர் நமக்குக் காட்டிய வாழ்க்கை நெறியை நாம் பின்பற்றவேண்டும். நாவலர் சைவமக்கள் சமய அறிவும், தமிழ் அறிவும் பெறவேண்டுமென்று எண்ணினர். நாவலரின் கனவுகளை நனவாக்குதல் இன்றைய மாணவர்களின் தலையாய கடமையாகும்.

பண்டித வித்துவான் இ. திருநாவுக்கரசு பேசுகையில் குறிப்பிட்டதாவது:

வாழ்க்கையில் ஒவ்வொருவரும் சமய ஒழுக்கமும், உயர்ந்த கல்வியும் பெறவேண்டும். இளமையான வயதில் கடவுள் வழிபாடு எதிர்காலத்தைச் செவ்வனே நடத்த உதவும். நாவலர் நமக்கு வழிகாட்டியாக இருக்கிருர். நாவலர் வாழ்ந்த காலத்திற்கும் இன்றுள்ள சூழ்நிலைக்கும் அதிக வேறுபாடுண்டு.

நாவலர் வாழ்ந்த காலத்தில் அந்நிய ஆட்சி இருந்தமையினுல் தமது எண்ணத்தை அவர் நிறைவேற்றுதல் சுலபமாக இருந்தது. ஆனல் இன்றுள்ள சூழ்நிலையில் நாம் சுதந்திரமுடையவர்களாக இருந்தாலும் நாம் நமக்குரிய வழி எது என்பதனைச் சரியாகத்தெரிந்து கொள்ளாமல் அல்லற்படுகின்றேரும். மாணவர்களுக்கு சுதந்திர சக்தி வேண்டும். புனித வாழ்க்கைக்காத்மீக நம்பிக்கை வேண்டும். மாணவ உயர்ந்த, பரந்த கல்வியை இளமையிலேயே பெற்றுக் கொள்ள வேண்டும். இளமையிற் பெற்ற கல்வி பிற்கால வாழ்க்கைக்கு உதவுவதாகும். அறிஞர்களின் தொடர்பும் கல்வி வளர்ச்சிக்குத் துணை செய்யும்.

# இந்தியாவைமீண்டும்தாக்கினுல் ஆயுதங்கள் குவியும்!

## சீனுவுக்கு ரஷ்யா எச்சரிக்கை

லண்டன், பெப். 7

உலகின் பல்வேறு நாடுகளிலுமுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் சீன, ரஷ்யா ஆகிய இருநாடுகளும் சமீபத்தில் கடிதங்கள் அனுப்பியுள்ளன.

சோவியத் ரஷ்யா இந்தியத் தோழர்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் சீன இந்தியாமீது ராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போது இந்தியாவுக்கு ஆயுதங்கள் அனுப்புவதனை நிறுத்தி வைப்பதனைத்தவிர வேறு வழியில்லை என்று கூறியுள்ளது.

சீனர்கள் அனுப்பியிருந்த கடிதத்தில் டிட்டோ விஷயத்தில் ரஷ்யா பின்பற்றும் கொள்கையையும், கியூபாவிலிருந்து குருஷ்சேவ் வாபஸானதையும் கண்டித்திருப்பதுடன் இந்தியாவை சீனுதாக்கியபோது ரஷ்யா மௌனம் சாதித்தமைக்கும் கண்டனந் தெரிவித்துள்ளனர்.

ரஷ்யர்கள் இதற்குப் பதிலளிக்கும் வகையில் உலகின் எல்லாக்கம்யூனிஸ்ட்கட்சிகளுக்கும் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இந்தியாமீது சீனு தாக்குதல் நடத்தியிருப்பதற்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியா போன்ற கோஷ்டிசேராத ஒரு நாட்டை தாக்குவதற்கு முன்பு தங்களுக்குத் தகவல்கூடக் கொடுக்கவில்லை என மாஸ்கோ வருந்துகிறது. இதனுல் சோவியத் அரசாங்கத்துக்கு தர்மசங்கடமான நிலை தோன்றியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்மோகன் எல்லைக்கோடு சரியாயிருந்தாலும் அல்லது தவருக இருந்தாலும் இந்தியாவை முதலாளித்துவ மேற்கத்திய நாடுகளுடன் சேர்ந்துவிடக்கூடிய ஒரு யுத்தத்தை ஆரம்பித்தது சரியல்ல என்றே மாஸ்கோ கருதுகிறது. இந்தத் தகராறில் மாஸ்கோவின் மத்தியஸ்தத்தையும் சீன நிராகரித்துவிட்டதாம்.

இந்தியாவுக்கு வேண்டிய தற்காப்பு சாதனங்களை ரஷ்யா அளித்துவருவது அமெரிக்காவுக்குத் தோல்வி என்பது சீனவுக்குத் தெரியும். இருந்தும் சீன இந்தியா மீது தாக்குதலை நடத்திக் கொண்டிருந்தபோது இந்தியாவுக்கு ஆயுதங்கள் அனுப்புவதை நிறுத்துவதனைத் தவிர வேறுவழி ரஷ்யாவுக்கு இல்லை. சீனர் தாக்குதலை நிறுத்தியதும் ரஷ்யா தனது பொறுப்புகளை நிறைவேற்ற ஆரம்பித்துள்ளது.

சீன இந்தியாவுடன் அமைதியான முறையில் பேச்சுக்களை நடத்த வேண்டுமென்று ரஷ்யா விருப்பம் தெரிவித்துள்ளது. மற்றொருதடவை சீன இந்தியாவைத் தாக்கினுல் இந்தியாவில் பிரிட்டிஷ் அமெரிகக ஆயுதங்கள் வந்து குவிந்துவிடுமெனவும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

## மொரார்ஜி எச்சரிக்கை

புதுடில்லி, பெப். 7

தங்கக் கள்ளக் கடத்தலையும், தங்கப் பதுக்கலையும் தடுப்பதற்கு இப்பொழுது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் போதியதாக இல்லாவிட்டால் வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று இந்திய நிதிமந்திரி திரு. மொரார்ஜி தேசாய் அறிவித்துள்ளார்.

## ஐயாறன் எழுதுவது

வண்ணை சிவன் கோவில் சந்நிதித் தெரு அழகானது. செல்வம் மிக்கது. மாடமாளிகைகளுடன், புகழ்பெற்ற பல நகைக் கடைகள் இருப்பதும் அங்குதான்.

மற்றக்கட்டடங்களைஎல்லாம் விட மிக உயர்ந்ததாக, "வைர மாளிகை" எனும் புதிய வர்த்தக ஸ்தாபனம் இவ்வாரம் அங்கு ஆரம்பமாகி, அத்தெருவின் கவர்ச்சியை இப்போது மிக அதிகரிக்கச் செய்திருப்பதாக ஓர் அன்பர் வந்து புகழ்ந்தார்.

பல மச்சுகளுடன் கூடிய இப்புதுக் கடைக்கு யாழ்ப்பாணத்து ஆச்சி ஒருவர்தான் சொந்தக்காரராம். அவரைப் பார்த்தால் கே. பி சுந்தராம்பாள் போலவே இருக்குமென்றும் மிக எளிய முறையில் உடுத்துவாரென்றும், தெய்வ பக்தி அதிகமுள்ளவரென்றும், செல்வத்துக்குரிய படாடோபமெதுவுமிராதென்றும் மற்ருேர் அன்பர்மூலம் அறிந்தேன். கோவிலுக்கு முன் ஒரு பழைய மண்டபமுண்டு. அதை அழகாகப் புதுப்பிப்பதற்கு அந்த அம்மை உதவியதாகவும் தெரிகிறது. மாலைப் பொழுதிலே தெருக்கோடியிலிருந்து பார்த்தால், கண்களுக்கு நல்ல விருந்தாகும்.

* * *

சிலர் கூறுவர், கோயிலுக்கும் உயர்வாக, கோவில் வீதிகளிலோ, சந்நிதியிலோ பெரிய மச்சுக் கட்டடங்கள் கட்டப்படாதென்று. அது இறைவனை அவமதிப்பதாகுமாம். கொழும்பிலே ஒரு கோயிலுக்குள்ளாகவே, மச்சுக் கட்டடம் கட்டியதுபற்றி சில அன்பர்கள் என்னிடம் குறைகூறினர்.

ஆனல் இக்காலத்திலே இவ்வித முக்கிய இடங்களுக்கு அதிக கிராக்கி. ஆகவே மேலேதான் மச்சுகளை கட்டவேண்டிய அவசியமேற்படுகிறது. எல்லாம் இறைவன் செயலென்ருல், இவ்விதம் உயரிய மச்சுகள் கட்டுவிப்பதும் அவன் செயலாகத்தானே இருக்க முடியும்.

இந்த சர்மசங்கடமான நிலைக்கு என்ன பரிகாரம்?

கோவில் கோபுரத்தை, மிக உயர்வாகக் கட்டிவிட்டால், இவ்வித குறைகளுக்கு இடமில்லாமல் போகலாமல்லவா? வண்ணை சிவன்கோவிலில் முன்னுல் ராஜகோபுரம் இல்லாதது பெரிய குறையாகும். இக்குறையைத் தீர்க்க, ஏழடுக்குள்ள ராஜகோபுரம் கட்ட திட்டமிடப்பட்டு, இவ்வாரத்தில் வேலையும் ஆரம்பமாகிவிட்டதாயும், அநேகமாக மாவிட்டபுரம் கோபுரம்போல் அவ்வளவு உயரியதாக இருக்கலாமென்றும் ஒரு மகிழ்ச்சியான செய்தியைக கேள்விப்பட்டேன்.

இந்தக் கோபுரம் சீக்கிரம் கட்டி முடியவேண்டும். முடிந்தால், வண்ணையம்பதியின் அழகே இன்னும் அதிகரித்து யாழ்ப்பாண நகருக்கே பெருமையும் மிகமதிப்புமளித்து, தூரத்திலுள்ளவர்களையும் இங்கு வசீகரிக்குமல்லவா?

* * *

யாழ்ப்பாணம் நல்லூரிலிருந்து நேற்று இக்கடிதம் கிடைத்தது:-

"பேரன்புமிக்க ஐயாறன் மாமா அவர்களுக்கு,

நானும் எனது அம்மாவும் எப்போதும்போல இன்றும் பத்திரிகையைத் திறந்தவுடன், தாங்கள் எழுதும் பகுதியைப் பிரித்தோம். அதில் பெயரிடப்படாத கொழும்பு அன்பர் எழுதியதைக்கண்டு வியப்புற்ரேம். அடாடா! இந்த சுவைமிக்க பகுதியை விடச்சொல்லி எழுதியதைக் கண்டதும், அவர்மேல் அளவிடமுடியாத ஆத்திரம். நல்ல காலம் அவர் தன் பெயரை வெளியிட

(7-ம்பக்கம் பார்க்க)

# 'கையுக்கு வாக்களியுங்கள்' எனத்தமிழர் கோரப்பட்டனர்

## ஹேவாகெட்ட தேர்தல் ஆட்சேப வழக்கில் வாதம்

## தீர்ப்பு இன்று வழங்கப்படும்

கொழும்பு, வியாழன்

'நீங்கள் தமிழர்கள். எனவே நீங்கள் எல்லோரும் கையுக்கே வாக்களியுங்கள்' என சங்கர் சில வாக்காளர்களிடம்கூறினர் என ஹேவா கெட்ட தேர்தல் ஆட்சேப மனு வழக்கு விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது திரு.எம்.ஏ.டானியல் அப்புகாமியின் சார்பில் ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஈ. ஜி. விக்கிரமநாயகா கியு. ஸி. குறிப்பிட்டார். கையுக்கு வாக்களித்தால் தினவரவு இடாப்பில் அவர்கள் வந்ததாகக் குறிப்பிடுவதாகவும் சங்கர் அந்த வாக்காளருக்குத்தெரிவித்திருந்தார் என கலுகாமி பொலிஸாருக்குத் தெரிவித்திருந்ததையும் திரு. விக்கிரமநாயகா சுட்டிக்காட்டினர்.

இவ்விதம் கையுக்கு வாக்களிக்காதவர்களுக்கு வேலை வழங்கப்படமாட்டாது என எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தது தகாத செல்வாக்கை உபயோகித்ததாகவிருக்கிறது என திரு. விக்கிரமநாயகா எடுத்துக் கூறினர்.

திரு விக்கிரமநாயகா மேலும் குறிப்பிட்டதாவது:

இங்கிலாந்தில் லஞ்சம் வாங்கியது சம்பந்தப்பட்ட வழக்குகளில் வழக்கு தாக்கல் செய்திருந்தவர்களுக்கு நீதியரசர்கள போதிய சட்ட வசதிகள் அளித்துள்ளனர்.

வழக்கு தாக்கல் செய்துள்ளவர் முதலில் சுயேச்சை அபேட்சகராக தேர்தலில் நின்ருரெனவும், பின்னர் யு.என்.பி.யில் சேர்ந்தாரெனவும் பணமோசடி சம்பந்தமாக அவர் மீது தாம் நடவடிக்கை எடுத்ததைத் தொடர்ந்து அவர் தம் மீது ஆத்திரம் கொண்டுள்ளாரென்றும் திரு. இலங்கரத்ன தெரிவித்துள்ளதாக இன்ஸ்பெக்டர் பியதாசா தமது சாட்சியத்தில் கூறியுள்ளார்.

இந்த விஷயத்தில் திரு. இலங்கரத்னவே சாட்சிக்கூண்டில் வந்து விபரங்களை ஏற்றிருக்கலாம் அல்லது எதிர்த்திருக்கலாம். ஆனல் அவர் அவ்விதம் செய்யவில்லை. இவ்விதபோக்கு இன்ஸ்பெக்டர் பியதாசா கூறிய சாட்சியத்தை வலுப்படுத்துவதாகவிருக்கிறது. எனவே குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படவேண்டிய அளவுக்கு மேலாக நிரூபிக்கப்பட்டுள்ளது.'

திரு. விக்கிரமநாயகா தமது வாதத்தை முடித்த பின்னர் திரு. இலங்கரத்ன சார்பில் ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. நடேசன் கியு. ஸி. இது போன்ற சில வழக்குகளில் நடைபெற்ற சம்பவங்களை உதாரணத்துக்காக எடுத்துக் காட்டினர்.

இதுவரை 23 நாட்கள் விசாரணை நடைபெற்றுள்ள இந்த வழக்கின் தீர்ப்பு நாளை வழங்கப்படும்.

---

### சீனவுக்குச் செய்தி அனுப்புவது யார்?

சென்னை, பெப். 7

சென்னை ராஜ்யத்தில் தற்காப்பு விதிகளின்கீழ் காவலில் வைக்கப்பட்டிருந்த 107பேர்களில் 61 பேர்கள் விடுதலை செய்யப்பட்டிருப்பதாக நிதிமந்திரி ஸ்ரீபக்தவத்ஸலம் சென்னை அசெம்பிளியில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

இவர்களுடைய விஷயம் மறுபரிசீலனை செய்யப்பட்டதென்றும் மேற்கொண்டு இவர்களைக் காவலில் வைத்திருக்க வேண்டியது அவசியமில்லை என்று கருதப்பட்டதால் விடுதலைக்கு உத்தரவு விடப்பட்டதென்றும் மந்திரி மேலும் தெரிவித்தார்.

உள்ளூரில் காலையில் பேசப்படுவது அன்றுமாலையே பீக்கிங் ரேடியோவில் ஒலிபரப்பப்படுகின்றதென்ற விவரம் அரசினருக்குத் தெரியுமா? இங்கிருந்து சீனவுக்குத் தகவல் அனுப்பப்படுகிறதா? விடுதலை செய்யப்பட்ட கம்யூனிஸ்ட்கள் மீது கண்காணிப்பு இருக்கிறதா? என்று ஒரு காங்கிரஸ் மெம்பர் கேட்டார்.

மந்திரி இதற்குப் பதிலளிக்கையில் இதுபீக்கிங்கின்சாமர்த்தியத்தையே காட்டுகிறது என்றும் ஆனல் கம்யூனிஸ்டுகளோ மற்றவர்களோ தகவல் அனுப்பிக் கொண்டிருக்கிருர்களென்ருே அல்லது நாட்டின் நலனுக்கு விரோதமாக நடந்து கொள்கிருர்களென்ருே அர்த்தமில்லை என்று குறிப்பிட்டார்.

---

### இலவச சமயதீட்சை

யாழ்ப்பாணம், வியாழன்

"சைவமக்கள் சிறுபான்மையினரைப் புறக்கணிக்கின்றனர் என்று கூறுவதில் அர்த்தமில்லை. மதமாற்றத்திற்கு சைவசமயத்தைக் காரணமாகக் கூறுவது பொருந்தாது. ஒழுக்கமுடையவர்களே உயர்ந்தவர்கள் என்பது பெரியோர்களுடைய கருத்து. இதனை ஒருபோதும் உதாசீனப் படுத்தக்கூடாது" என்று திரு. த. இராசரத்தினம் அகில இலங்கை பொதுஜனசேவைச் சங்க ஆதரவில் தல்லாலை மருதடிவிநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற இலவச சமயதீட்சை வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். இலவச சமய தீட்சையை 10 பேர் பெற்றுக் கொண்டனர். இவ்வைபவத்தை சிவஸ்ரீ ஆ. கனகசபாபதிக் குருக்கள் நடத்திவைத்தார்.

---

### நடிகர் நம்பியாரின் நகைகள் திருட்டு!

சென்னை, பெப். 7

சினிமாநடிகர் எம். என். நம்பியாரின் தங்க நகைகளும், கல் பதிக்கப்பட்ட நகைகளும் திடீரெனக் காணமற் போய்விட்டன. செங்கற்பட்டு பொலிசார் இதுபற்றிவிசாரணை நடத்திவருகிருர்கள்.

சென்னையிலிருந்து நடிகர் மோட்டரில் போய்க்கெண்டிருந்தார் எனவும் அவரது ஆசனத்தில் நகைகள் வைக்கப்பட்டிருந்ததெனவும் சொல்லப்படுகின்றது. நகைகளின் மதிப்பு சுமார் 75 ஆயிரம் ரூபாய் என மதிக்கப்பட்டுள்ளது. ஆசனத்தில் வைக்கப்பட்ட நகைகள் காணமல்போகவே அவ் விஷயத்தை நம்பியார் பொலிசாரிடம் புகார் செய்துள்ளார்.

---

# சந்தேகநபர் இறந்த நிலையில் காணப்பட்டார்

## புத்தளம் கொலை வழக்கில் ஒரு திருப்பம்

கொழும்பு, வியாழன்

புத்தளம் அநுராதபுர வீதியில் நடைபெற்ற கொலை சம்பந்தமாக பொலிஸார் நடத்திவந்த விசாரணையில் நேற்று சந்தேகநபர் ஒருவரைக்கண்டு பிடித்தனர். ஆனல் அவரை உயிருடன் கைதுசெய்ய அவர்களால் முடியவில்லை. சந்தேகநபரான டபிள்யு. எம். திக்கிரிபண்டாவின் சடலத்தைத்தான் பொலிசாரால் கண்டுபிடிக்க முடிந்தது. பொலிசார் அவரைக் கைதுசெய்யு முன்னரே அவர்காலமாகிவிட்டார்.

குருநாகலையிலுள்ள வந்துராகலை எனுமிடத்தில் திக்கிரிபண்டாவின் சடலம் புதர் மரமொன்றில் தொங்கிக் கொண்டிருந்தது. இவரைத் தேடித்திருந்த பொலிசார் நேற்று விடியற்காலை இந்த நிலையில்தான் பார்க்கமுடிந்தது.

கொலைசெய்யப்பட்ட ஆர். மிடடபாலாவுடன் நட்புறவு கொண்டிருந்த மூவருள் திக்கிரிபண்டாவும் ஒருவர் என பொலிசார் சந்தேகித்திருந்தனர்.

இறந்தவரின் சடலத்தை பிரேதபரிசோதனை செய்யவும் இதுபற்றி விசாரணைசெய்யவும் பொலிசாரால் நேற்று நடவடிக்கை எடுக்கப்பட்டது.

---

### என்ஜினியரிங் கம்பனிகளில் ஆட்குறைப்பு!

கொழும்பு, வியாழன்

என்ஜினியரிங்தொழிலை நம்பி தங்களது வாழ்க்கையைக் கொண்டுசெல்லும் மூவாயிரம் பயிற்சிபெற்ற, பயிற்சிபெருத தொழிலாளர்களுக்கு ஒரு இக்கட்டான நிலமை இப்பொழுது தோன்றியுள்ளது. என்ஜினியரிங் ஸ்தாபனங்கள் பல ஆட்குறைப்பு செய்வதை உத்தேசித்திருப்பதே இதற்குக் காரணமாகும்.

சாதனங்களுக்கும், மற்றும் கருவிகளுக்கும் இறக்குமதிக் கட்டுப்பாடு இருப்பதனல், நாளாந்தம் நடைபெறும் வேலைகளைக் குறைக்கவேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளதென்றும் இதனல் ஸ்தாபனங்களில் வேலையாட்களைக் குறைக்க வேண்டியிருக்கிறது என்றும் என்ஜினியரிங் ஸ்தாபனங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பிலுள்ள பிரபல என்ஜினியரிங் கம்பெனிகள் பல, இதுசம்பந்தமாக தொழிற் கமிஷனருக்குத் தெரிவித்துள்ளது. அடுத்த இரண்டுமாத காலத்துக்குள் ஏராளமானவர்களை வேலையிலிருந்து நீக்க வேண்டிய தவிர்க்கமுடியாத ஒருநிலை தங்களுக்கு ஏற்படும் என்றும் இக்கம்பெனிகள் அறிவித்துள்ளன.

---

### தொழில் பாதிப்பு

மன்னர், வியாழன்

மன்னர்பகுதியில் மழை வருவதற்கான அறிகுறிகள்காணப்பட்டாலும் மப்பும்மந்தாரமுமாகவே இருக்கிறது. காற்றும் குளிரும் இருப்பதால் கடற்தொழில்களுக்கு போவதற்கு மிகவும் சிரமப்படவேண்டி இருக்கிறது.

---

### நெசவுநிலையத் திறப்புவிழா

#### அடுத்தவாரம் நிகழும்

யாழ்ப்பாணம், வெள்ளி

பண்டத்தரிப்பு கிராமசபையினர் புதிதாக 7000 ரூபாய் செலவில் பண்டத்தரிப்பில் நசவு நிலையம் ஒன்றினை நிர்மாணித்துள்ளனர். இந்த நிலையத்தின் திறப்புவிழா அடுத்த வாரம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிலையத்திற்குற்கு வேண்டிய உபகரணங்கள் யாவும் அரசாங்கத்தினல் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையத்தில் சேர்ந்து நெசவுத் தொழிலில் பயிற்சிபெறுவதற்கு விரும்பும் மாணவிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

---

# "நாட்டின் முன்னேற்றத்துக்கு ஒற்றுமை அவசியம்"

## சபாநாயகர் வற்புறுத்தல்

நாவலப்பிட்டி, வியாழன்

"சுத்தமானகாற்று தேகசுகத்துக்கு மிகவும் அவசியம்என நாம் அறிவோம். ஒரு நாட்டின் நல்வாழ்வுக்கு அந்த நாட்டிலுள்ள மக்கள் நல்ல வார்த்தைகளை உபயோகிப்பது நல்லது. எனவே இந்த நாட்டிலுள்ளவர்கள் நல்ல வார்த்தைகளை உபயோகிக்க வேண்டுமென நான் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்."

இவ்வாறு சபாநாயகர் திரு. ஆர். எஸ். பெல்பொல மப்பகந்தையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

இங்கு புதிதாகக்கட்டப்பட்ட மருந்துச்சாலையை ஆரம்பித்து வைத்தபின்னர் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையிலேயே திரு. பெல்பொல மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. பெல்பொல மேலும் பேசுகையில் கூறியதாவது:

**ஒற்றுமை அவசியம்**

தீயவார்த்தைகள் தீமையையே விளைவிக்கும். மக்களின் ஒற்றுமையை இது குலைத்துவிடும்.

நாட்டின் முன்னேற்றத்துக்கு ஒற்றுமை அவசியம். எனவே மக்களெல்லோரும் இன, மத, வகுப்பு பேதங்களை நீககி ஒற்றுமையாக உழைக்கவேண்டும்.

ஒருவர் மற்றவரைப்பற்றிக் கண்டிக்க விரும்பினல் அவர் கண்டிக்கவிரும்புபவர் முன்னிலையிலேயே தமது கண்டனத்தை தெரிவிக்கவேண்டும்.

பேசுமுன்னர் எதைப் பேச வேண்டும் என்பதுபற்றி எண்ணிப்பார்த்துப் பேசுங்கள். செயலில் இறங்கும்போதும் இவ்விதம் எண்ணி செயல்புரியுள்கள். இவ்விதம் நடந்து கொண்டால் பின்னர் கவலையடையக் காரணமிருக்காது.

கண்டிய விவசாயக் கமிஷனின் இணைப்பதிகாரி பேசுகையில், கிராமமக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் தாமதமேற்படுவது கிராம மக்களில் அரசாங்கம் அக்கறையின்மை கொண்டுள்ளதாகவோ அரசாங்கத்தில் திறமையின்மை இருப்பதாகவோ கருதக்கூடாது. போதிய நிதி இல்லாததே இதற்குக் காரணம்.

---

### 'இருநேர வகுப்பு வேண்டாம்'

தெல்தெனியா, வியாழன்

பாடசாலைகளில் இருநேர (முழுநேர) வகுப்புகள் நடத்த வேண்டுமென்ற கல்வி இலாகாவின் யோசனைக்கு தெல்தெனியா சிரேஷ்ட பாடசாலை பெற்ருர்—ஆசிரிய சங்கம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

---

### தரையிலிருந்து கற்கின்றனர்

உடுநுவர, வியாழன்

பேராதனையிலுள்ள, ஆரம்பப்பாடசாலையில் மேலதிகமாக 200குழந்தைகள் சேர்ந்துள்ளதால் குழந்தைகள் தரையிலிருந்து படிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

---

### தைப்பூச விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

நேற்று தைப்பூச விழா யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் உள்ள சைவாலயங்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. சைவமக்கள் ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுசெய்தனர். ஆலயங்களில் சமயச் சொற்பொழிவுகளும், இன்னிசைக் கச்சேரிகளும் நடைபெற்றன.

---

### தொல்புரத்தில் இலவச படக்காட்சி

தொல்புரம் வெள்ளி

தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தினரின் ஆதரவின்கீழ், மத்திய விளையாட்டு மைதானத்தில் இம்மாதம் 10-ம் திகதி அமெரிக்க தகவல் பகுதியினரால், ஓர் இலவச படக்காட்சி காண்பிக்கப்படும்.

---

### ஐயாறன்

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

வில்லை. தனது கருத்து சரியில்லை என்ற சந்தேகத்தாலேயே அவர் பெயர் எழுதவில்லைப்போலும். ஆகையால் இப்படிப்பட்டவர்களின் பேச்சைக் கேட்டு நீங்கள் எழுதாமல் பல ஆயிரக்கணக்கான வாசகர்களை ஏமாற்றிவிடவேண்டாம். தாங்கள் நீடூழி வாழ்ந்து, இந்தப் பகுதியைக் கூடுமானவரை தொடர்ந்து எழுத நான் மனமாரப் பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு
ஈழநாடு வாசகி
சந்திரிகா. தி."

---

### "ஏன் அடித்தாய்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வியாபாரி கே. முதலிசாமி தான் கமவிதானையாக மூன்று வருடம் வேலைபார்த்ததாகவும், அதன்பின் இவ்வேலைக்குத்தான் போட்டிபோடவில்லையென்றும் இறந்தவரும் எதிரியும் தானும் ஐக்கிய பண்டகசாலை சங்கத்தில் அங்கத்தவர்களாக இருந்தார்களென்றும் குறுக்குவிசாரணையின்போது கூறினர்.

வியாபாரி காசிப்பிள்ளை கந்தையா தான் சீமானுக்கு கூலி கொடுக்கும்போது கையிலுள்ள காயத்தை காணவில்லையென்று குறுககுவிசாரணையின் போது தெரிவித்தார்.

வணஸ்வதிகே என்ற பெண்ணும் சாட்சியமளித்தார். மேல் விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும்.

---


### 'ஈழநாடு' கொழும்புக்கிளை

கொழும்பில் 'ஈழநாடு' பத்திரிகையின் விநியோகம் பற்றி தகவல் பெறவிரும்பும் வாசகர்களும் ஏஜண்டுகளும் கீழ்க்காணும் விலாசத்திலிருக்கும் எமது கிளைக்காரியாலயத்துடன் தொடர்பேற்படுத்திக் கொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

நிர்வாகி
'ஈழநாடு' (கொழும்பு)
சரஸ்வதி மண்டபம்,
லோறன்ஸ் வீதி,
கொழும்பு4.

The Manager,
'EELANADU' (COLOMBO)
Saraswathy Hall,
Lorensz Road,
Colombo 4.

Phone: 81975

# செய்தித்திரட்டு

## மேலும் ரிமாண்ட்

கொழும்பு, வியாழன்
கள்ள பாஸ்போட் மோசடி சம்பந்தமாக கைது செய்யப்பட்டு பின்னர் ரிமாண்டில் வைக்கப்பட்ட இரண்டு சீனர்கள், இம்மாதம் 18-ம் திகதி வரை மேலும் ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

## நியமனம்

திருமலை, வியாழன்
சாம்பல்தீவைச் சேர்ந்த திருமதி இராசலட்சுமி விஜயரத்தினம், உப்புவெளி, கன்னியா ஆகிய பகுதிகளுக்கான பெண் பதிவுகாரராக (பிறப்பு, இறப்பு) நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## மகாநாடு

திருமலை, வியாழன்
தம்பலகமம் தமிழ் பேசும் வாலிப முன்னணியின் முதலாவது மகாநாடு, இம்மாதம் 10-ம் திகதி காலை தம்பலகமம் கிராமசபைத் தலைவர் திரு. எஸ். வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

## கல் நாட்டு விழா

திருமலை, வியாழன்
இம்மாதம் 10-ம் திகதி காலை பஸ் தங்குமிடம் ஒன்றினைக் கட்டுவதற்கென தம்பலகமம் கோணேசர் கோயிலுக்குச் சேர்ந்த காணியொன்றில் மூதூர் முதலாவது [illegible]ம். பி. ஜனாப் முகம்மது அலி அத்திவாரக் கல்லை நாட்டினர்.

## காரியாலயம்

ஊர்காவற்றுறை, வியாழன்
தீவுப்பகுதி பலநோக்க கூட்டுறவுச் சங்க சமாசத்தின், தலைமைக் காரியாலயம் ஒன்றை ஊர்காவற்றுறையில் நிறுவுவதென்று மேற்படி சமாசம் தீர்மானித்துள்ளது. திரு. பி. கதிரவேலு தலைமையில் நடைபெற்ற சமாச காரிய நிர்வாக சபைக் கூட்டத்தில் மேற்கண்ட முடிவு செய்யப்பட்டது.

## பாராட்டு விழா

பருத்தித்துறை, வியாழன்
கட்டைவேலி ஞானசாரியர் கல்லூரியில் கடந்த பத்து வருடங்களாக ஆசிரியராகச் சேவைசெய்து இடைக்காடு ஆங்கில வித்தியாசாலைக்கு இடமாற்றம் செல்லும் திரு. கு. நடராசாவுக்குக் கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும் பிரிவுபசார விழாவொன்றை நடத்தினர்.

பருத்தித்துறை, வியாழன்
மருதங்கேணி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆங்கில உதவி ஆசிரியர் திரு. வி. சேதுநாயகம், கிராம சேவையாளராக தெரிவுசெய்யப்பட்டதைப் பாராட்டுமுகமாக அவருக்கு ஒரு பாராட்டுவிழாவை நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## அங்குரார்ப்பணம்

பருத்தித்துறை, வியாழன்
அண்மையில் நடைபெற்ற பருத்தித்துறைப்பகுதிப் பாடசாலைகளின் ஆங்கில ஆசிரியர்களின் மகாநாட்டில், 'பாடசாலைகளில் ஆங்கிலக் கல்வி' என்னும் பொருள்பற்றிய கருத்தரங்கம் நடைபெற்றதுடன் ஆசிரியர் கழகம் ஒன்றும் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இம் மகாநாட்டை வட்டார வித்தியாதரிசி திரு. எஸ். பி. சிவபாதம் கூட்டியிருந்தார்.

## ஆட்சேபம்?

பருத்தித்துறை, வியாழன்
[illegible] கிராமசபைக்கு, நிரந்தரமான புதிய காரியாலயம் ஒன்று அம்பன் அரசினர் வைத்தியசாலைக்கருகில் கட்டப்படவிருக்கிறது. இருந்தபோதிலும் இதை, பொதுமக்கள் ஆட்சேபித்திருப்பதாகத் தெரியவருகிறது.

## சமயப் பிரசங்கம்

யாழ்ப்பாணம், வியாழன்
எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை நல்லூர் தேவஸ்தான காவலரின் ஆதரவின் கீழ் இயங்கும் அகில இலங்கை பொதுஜன சேவைச் சங்கச் சமயப்பிரசார சபையின் வாராந்த தொடர்ச்சிப் பிரசங்கத்தில் யோகேஸ்வரி இராசையா, 'ஆலயமும் வழிபாடும்' என்னும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றுவார்.

## ரிமாண்டில் பிக்கு

நாரம்மல, வியாழன்
தம்பதெனியா ராஜமகாவிகாரையைச் சேர்ந்த பி. தர்மஜோதி தேரோவின் கைகளைக் கட்டி, பின்னர் தாக்கி அவரைக் காரினுள் கொண்டு சென்றது சம்பந்தமாக இரண்டு பௌத்த பிக்குகளும் மற்றும் இருவரும் ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், வியாழன்
ஊவா மாகாண தமிழ்ச்சங்க செயலாளராகவும், பதுளை திருக்குறள் மன்ற உபதலைவராகவுமிருந்த ஆசிரியர் திரு. ஆ. கல்யாணசுந்தரேசன், பதுளை தர்மதுத்தாக் கல்லூரியிலிருந்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கண்டி, வியாழன்
கண்டி நீர்ப்பாசன இலாகாவில் தொழில்நுட்ப உதவியாளராகக் கடமையாற்றிய திரு. கே. செல்வரத்தினம் எம்பிலிபிட்டியாவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## மாங்காய் ஏற்றுமதி

கொழும்பு, வியாழன்
வற்றாளைக்கிழங்கு, மாங்காய் ஆகியவை, இலங்கையிலிருந்து பிரிட்டனுக்கு விரைவில் ஏற்றுமதி செய்யப்படவிருக்கிறது. இலங்கையிலிருந்து பல விவசாயப்பொருள்களை இறக்குமதி செய்வதுசம்பந்தமாக வெளிநாடுகளிலுள்ள பல வர்த்தக ஸ்தாபனங்கள், வர்த்தக அமைச்சுடன் தொடர்புகொண்டுள்ளதாகத் தெரிகிறது.

## சுதந்திரதினத்தில்...

செங்கடகலை, வியாழன்
சுதந்திரதினத்தன்று ஒரு மோட்டார் விபத்தில் காயமடைந்த நால்வர், கண்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## கருத்தரங்கம்

கொழும்பு, வியாழன்
ஜி. ஓ. எச். கட்டடத்தில் நாளை நடைபெறும் சர்வதேச யூனியனின் சோஷலிஸ ஆசிய இளைஞர் கருத்தரங்கத்தில் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சொற்பொழிவாற்றுவார். இக்கருத்தரங்கத்தில், ஆசிய ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பல தூதுகோஷ்டியினர் பங்குபற்றுவார்கள்.

## சிரமதானம்

கொழும்பு, புதன்
வருகிற ஞாயிற்றுக்கிழமை மகாரையில் நடைபெறும் சிரமதான இயக்கத்தை மந்திரி திரு. வி. பி. டி' சில்வா ஆரம்பித்து வைப்பார். அதில் [illegible]000 தொண்டர்கள் கலந்து கொள்வார்கள்.

# மட்டுநகர்செய்தி

## மீண்டும் மழை

மட்டக்களப்பு, வியாழன்
மட்டக்களப்புப் பகுதியில் கடந்த ஒருவாரமாக மீண்டும் பெருமழை பெய்தவண்ணமிருக்கிறது. ஏற்கனவே பெய்த மழையினாலும் ஏற்பட்ட வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டும் மழைபெய்ய ஆரம்பித்ததும் அதிக கஷ்டம் அனுபவிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து மழை பெய்த வண்ணமிருப்பதால் இப்பகுதியில் உணவுப் பொருட்கள் விலையேற்றப்பட்டுள்ளன. கொத்து ரூ. 1-05 சதம் விற்ற அரிசி தற்போது ரூ. 1-25 சதமாக விற்கப்படுகிறது. மீன்விலை பெருமளவிற்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

## ஆஸ்பத்திரிக் கமிட்டி

மட்டக்களப்பு, வியாழன்
கௌரவ சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்ட மட்டக்களப்பு பிரதம ஆஸ்பத்திரிக் கமிட்டியின் விபரம் வருமாறு: திரு. எஸ். ஏ. செல்வநாயகம், (தலைவர்), திரு. சி. ஏ. பாலசிங்கம் (காரியதரிசி), திரு. டி. ஜே. எஸ். திஸவீரசிங்கம் (நகரசபைத் தலைவர்), திருமதி டபிள்யூ. உலகசேகரம், திரு. குருதேரு, டாக்டர் பி. காராளசிங்கம், ஜனாப் எம். ஐ. எம். காசிம்ஹாஜியார், ஜனாப் ஏ. அகமதுலெப்பை, திருமதி வி. ரி. ஞானசூரியம், டாக்டர் கே. சிவஞானரட்ணம் (சுகாதார அதிபர்.)

## புதிய தேவாலயம்

மட்டக்களப்பு, வியாழன்
மட்டக்களப்பு--புளியங்குடாவில் சுமார் இரண்டு லட்சம் ரூபா செலவில் ஓர் புதிய சென்செபஸ்தியன் தேவாலயமொன்று கட்டப்படவிருக்கின்றது. திருமதிமேற்றிராணியார் வந்திக்கத்தக்க வண. இக்னேசியஸ்கிளனி, பிரஸ்தாப ஆலயத்திற்கான அஸ்திவாரக் கல் நாட்டினர்.

தற்போதைய சென். செபஸ்தியார் தேவாலயம் வளர்ந்து வரும் கத்தோலிக்க சமுதாயத்திற்கு மிகவும் சிறிதாக இருப்பதாலேயே இப்புதிய தேவாலயம், நவீன வசதிகளுடன் சுமார் 1500 பேர் இருந்து பிரார்த்தனை செய்யக் கூடியதாக அமைக்கப்படவிருக்கிறது.

## ஒன்று கூடின

மட்டக்களப்பு, வியாழன்
கடந்த பல மாதங்களாக தனித்தியங்கி வந்த, மட்டக்களப்பு உதைபந்தாட்ட லீக்கும், உதைபந்தாட்டச்சங்கமும் தற்போது ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன. திரு. கே. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற விசேஷ பொதுக்கூட்டமொன்றில் மட்டக்களப்பு உதைபந்தாட்டச் சங்க உத்தியோகஸ்தர் தேர்வு நடைபெற்றது.

ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகசபையின் விபரம் வருமாறு: தலைவர்: திரு. சி. லுடகென்ஸ (அரசாங்கஅதிபர்), உபதலைவர்கள்: திருவாளர்கள்: பி. ஜி. காசிநாதர், ஆர். கதிரவேலு, எப். எக்ஸ். மார்ட்டீன், எம். ஞானப்பிரகாசம், பி. ரி. அரசன். செயலாளர்: திரு. எப். ஆர். ருகல், உபசெயலாளர் கே. லேர்கிதராஜா. பொருளாளர்: ஜே. எப். ஷெலர். கணக்குப்பரிசோதகர்: எப். டி. பிரான்சிஸ.

# மன்னார் செய்தி

## பயிர்ச்சேதம்

மன்னார், வியாழன்
அடிக்கடி பெய்துவரும்மழையின் காரணமாக மன்னார் மாவட்ட நெற்பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. புழுதி விதைப்பிலும், சேற்றுவிதைப்பிலும் கலந்து கொண்ட எல்லாக்கமக்காரர்களுக்கும் இத்தகைய பயிர்ச்சேதம் ஒரு பெருந் தலையிடியைக் கொடுத்துள்ளது.

## தெரிவு

மன்னார், வியாழன்
மன்னார் பட்டினசபையில் சமீபத்தில் நடந்த கூட்டத்தில் பனங்கட்டிக்கொட்டிலைச் சேர்ந்த திரு. எஸ். மருசலீன் என்பவர் உபதலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

## கறுப்புக்கொடி

மன்னார், வியாழன்
மன்னார் பகுதியிலுள்ள சில மக்கள் பெப்ரவரி 4-ந்திகதி அன்று தங்கள் துக்கத்தைத் தெரிவிக்கும்முகமாக இல்லங்களில் கறுப்புக் கொடியைப் பறக்கவிட்டிருந்தார்கள், பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. ஏ. அழகக்கோன் இல்லத்திலும் பட்டினசபை முன்றலிலும் மற்றும்பல கட்டிடங்களிலும் கறுப்புக் கொடிகள் காணப்பட்டன.

## ஒரே இருள்

மன்னார், வியாழன்
சுதந்திர தினத்தையொட்டி லீவுநாளைக் கழித்து மன்னாருக்கு ரயிலில் திரும்ப வேண்டிய பிரயாணிகள் மதவாச்சிப் புகையிரத நிலையம் இருளில் மூழ்கிக் கொண்டிருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். என்றுமேயில்லாதவாறு மதவாச்சிப் புகையிரத நிலையம் இருளிற் கிடந்ததால் கொழும்பு, யாழ்ப்பாணம், மன்னார் முதலிய இடங்களுக்குச் செல்லும் பிரயாணிகள் கஷ்டப்பட வேண்டியதாயிற்று.

# நழுவளத்தனிக்கையில் பிடிபட்டார்

## பிரபல திருடன்

நீர்கொழும்பு, வியாழன்
பல வழக்குகளில் சம்பந்தப்பட்டதாக ரிமாண்டில் வைக்கப்பட்டு, பின்னர் மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ரயிலில் கொண்டுவரப்பட்ட பொழுது ஹபரணையில் தப்பியோடிய 'ராஜா' என்ற பெயர் கொண்ட பிரபல திருடன், இப்பொழுது மட்டக்களப்பு சிறையில் வைக்கப்பட்டுள்ளார்.

வீடுகளை உடைத்தும், கூரைகளைப் பிரித்தும் நகைகள் திருடும் இந்த நபர், சில நாட்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் நகருக்கும் 'விஜயம்' செய்திருந்தாரென்றும், இவர்பற்றி எச்சரிக்கையாகவிருக்கும் படியும் பொலிஸார் அறிவித்திருந்தது வாசக நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

சிலாபத்தில் ஒரு சைக்கிள் வழக்கில் சம்பந்தப்பட்டதாக நீர்கொழும்பில் ரிமாண்டில் வைக்கப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்படும் தினம் (கடந்த வாரம்) நழுவ முயன்ற இந்நபரை யாழ்பாணத்திலிருந்து நீர்கொழும்பு சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட திரு. கிரகோரி ஜோன் (கார்ட்) என்பவர், குறிப்பிட்ட நபரை அடையாளம் கண்டுகொண்டார். இதன் பின்னர் இந்நபர் மட்டக்களப்பு சிறைக்கு அனுப்பப்பட்டார்.

நான்கு வருட சிறைத் தண்டனை அனுபவிக்கும் 'ராஜா' என்ற இந்நபர், பல பெயர்களுடன் பல திருட்டு வழக்குகளில் சம்பந்தப்பட்டிருக்கிறார். 'அக்பர்' என்ற பெயருடன் அண்மையில் இவர் சிலாபம் சைக்கிள் திருட்டில் சம்பந்தப்பட்டார்!

# தமிழாசிரியர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி
வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் முப்பத்தொன்பதாவது வருடாந்தக் கூட்டம் நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இக்கூட்டத்தில் ஸ்ரீ லங்கா ஜாதிக குரு சங்கக் காரியதரிசி திரு. ஏ. எல். ஆரியவன்சா, உபதலைவர் திரு. கே. ஜே. பெர்னாண்டோ, உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் ஆகியோர் முக்கிய பேச்சாளர்களாகக் கலந்துகொள்ளுகின்றனர். ஆசிரிய சங்கப் பிரதிநிதிகளும் உரையாற்றுவர்.

டோக்கியோ, பெப். 6
ஜப்பானில் குளிரின் காரணமாக 15 பேர் மாண்டனர். இதுவரை மொத்தம் 100 பேர் மாண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. ஐரோப்பாவிலும் கடும் பனி தொடர்ந்திருக்கிறது.




சுகசௌகரியத்திற்கு
டிப்ளமெட் சேட்களை
அணியுங்கள்

Diplomat Shirts

HIRDARAMANI INDUSTRIES LIMITED.
ஹிர்தராமணி (இன்டஸ்றீஸ்) லிமிட்டெட்

# கடற்படைக் கோஷ்டி வெற்றி

யாழ்ப்பாணம், வியாழன்

அரசாங்க ஊழியர் விளையாட்டுச் சங்க ஆதரவில் யாழ்ப்பாணம் பொலிஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வரும் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கடற்படை 'ஏ' பிரிவுக் கோஷ்டியும், தபால் இலாகா 'ஏ' பிரிவுக் கோஷ்டியும் கலந்து கொண்டன. இப்போட்டியில் கடற்படைக் கோஷ்டி 2 கோல்களால் வெற்றியீட்டியது. தபால் இலாகா கோஷ்டி 1 கோல் போட்டது.

விளையாட்டு ஆரம்பமானது முதற்கொண்டு இறுதிவரை தபால் இலாகா கோஷ்டி மிகத் திறமையாக விளையாடிய போதும், தபால் இலாகாவைச் சேர்ந்த கோல்காப்பு வீரரின் கவலையீனத்தால் கடற்படைக் கோஷ்டி 2 கோல்கள் போட முடிந்தது.

இப்போட்டிக்கு திரு. இ. கனகலிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## விளையாடாமலே வெற்றி

நகரசபை 'பி' பிரிவுக் கோஷ்டியும், சிறைச்சாலை 'பி' பிரிவுக் கோஷ்டியும் கலந்து கொள்ளவேண்டிய போட்டியில் மாநகரசபைக் கோஷ்டிக்கு விளையாடாமலே வெற்றி வழங்கப்பட்டது. சிறைச்சாலைக் கோஷ்டி விளையாட வரவில்லை.

சுகாதாரப் பகுதி 'பி' பிரிவுக் கோஷ்டிச்கும் இ.போ.ச. 'பி' பிரிவுக் கோஷ்டிக்குமிடையேயான போட்டியில் இ. போ. ச. கோஷ்டி விளையாடாமையினால் சுகாதாரக் கோஷ்டிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

'ஏ' பிரிவில் பொலிஸ் கோஷ்டிக்கும் கச்சேரி கோஷ்டிக்குமிடையே நடைபெறவிருந்த போட்டி பின் போடப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பு நகரசபைக் கமிட்டிகள் தெரிவு

மட்டக்களப்பு, வியாழன்

மட்டக்களப்பு நகரசபையின் மாதாந்த கூட்டம் அதன் தலைவர் திரு. ஜே. எல். திஸவீரசிங்கம் தலைமையில் நடைபெற்றபோது, நடப்பு வருடத்திற்கான, பின்வரும் கமிட்டிகள் தெரிவுசெய்யபபட்டன.

கமிட்டிகள் விபரம் வருமாறு:-

நிதிக் கமிட்டி:- திருவாளர்கள்: ஏ. எஸ். ரி கனகசபை, பி. ஆர். செல்வநாயகம், என். அருளாநந்தம், எஸ். கணேசமூர்த்தி, ஜே. என். ஹென்றி, ஆர். கதிரவேலு, எஸ். குழந்தைவேலு.

சட்டக கமிட்டி:- திருவாளர்கள்: ஏ. எஸ். ரி கனகசபை, பி. ஆர். செல்வநாயகம், ஜே. என். ஹென்றி, என். அருளாநந்தம், பி. எஸ். கனகசபை, எஸ். கணேசலிங் கமூர்த்தி, எஸ். குழந்தைவேலு.

மின்சாரக் கமிட்டி:- திருவாளர்கள்: எஸ். ஜேம்ஸ், பி. எஸ். கனகசபை, எஸ். கணேசமூர்த்தி, ஆர். கதிரவேலு. பி. ஆர். செல்வநாயகம், எஸ். குழந்தைவேலு.

விளையாட்டு மைதானக் கமிட்டி:- திருவாளர்கள்: எஸ். கணேசமூர்த்தி, ஆர். கதிரவேலு, பி. ஆர். செல்வநாயகம், அருளாநந்தம், வண. பிதா வெபர், வி. ரி. ஞானசூரியம், டி. ஜோசப், செல்வி. ஆர். எஸ். கனகரட்ணு, திருமதி ரி. சிவநாதன், எஸ். ஜோசப் (பொலிஸ் அதிபர்), எஸ். குழந்தைவேல், வி. வாமதேவன், ரி. ரி. கனகலிங்கம்.

வாசிகசாலைக் கமிட்டி:- திருவாளர்கள்: ஜே. எல். திஸவீரசிங்கம், பி. ஆர். செல்வநாயகம், எஸ். குழந்தைவேலு, எஸ். ஜேம்ஸ், ஆர். கதிரவேலு, திருமதி கே. திருநாவுக்கரசு, செல்வி. ஆர். கந்தையா, கே. கணபதிப்பிள்ளை, வி. ரி. ஞானசூரியம், வண. பிதா ஜீயோ வம்பீக், வண. எஸ். எச். ராமநாதன், ம. த. லோரன்ஸ்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### வெள்ளி 8-2-63

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 உருத்திராணி நல்லநாதன்–பக்திப்பாடல்கள், 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1–00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாதஸ்வரம், 6-15 பாங்கு, 6-30 கிராம சஞ்சிகை, 6-45 வீணை.

இரவு 7-00 ஞானாஞ்சலி, 7-30 நேயர் விருப்பம், 8–00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 விமர்சனங்கள், 9-30 இராசிவ அன்பு- கதாப்பிரசங்கம், 10-15 தேர்ந்த இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6–50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7–05 வாத்திய இசை, 7–10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7–30 செய்திக்குறிப்புகள், 7-35 நாதஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 மாதர்நிகழ்ச்சி, 1-30 வாத்திய இசை, 1-50 குரலிசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி(கர்நாடக சங்கீதம்) 5-45 காந்தி அஞ்சலி, 6-20 கிராமநிகழ்ச்சிகள் .

இரவு 7-30 'பொங்கி எழும் பாரதம்' சித்திரம், 9-15 பலகணி, 9-30 மெல்லிசை (சென்னை அஞ்சல்) 9-45 இசைமாலை, 9-55 வெற்றிப்பாதையில் : சித்திரம்.

## காட்டுக்குள் பிரேதம் பொலிஸ் தீவிர விசாரணை

கொழும்பு, புதன்

புத்தளம்-அனுராதபுரம் பிரதான வீதியிலிருந்து முக்கால் மைல் தூரத்திலுள்ள காட்டுக்குள் கடந்த வாரம் நடைபெற்றதாகக் கருதப்படும் ஒரு கொலை சம்பந்தமாக இபபொழுது 2ஸ்ரீ5826 என்ற இலக்கம் கொண்ட ஒரு 'ஒப்பல்' காரையும், இரு நபர்களையும் தேடுவதில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

காரின் இலக்கத்தைப் பொலிஸார் கண்டுபிடித்ததிலிருந்து இக்கொலை சம்பந்தமாக ஒரு துப்பு கிடைத்திருக்கிறதாகக் கருதப்படுகிறது. கொலைசெய்யப்பட்டவர் பொல்பிட்டிய என்ற இடத்தைச் சேர்ந்த வாடகைக் கார்ச்சாரதியான ஆர். மித்தபால என்று அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மித்தபாலாவைக் கடைசியாக கண்ட நண்பர்கள் தெரிவிக்கையில், மித்தபாலா இரு நபர்களுடன் காரில் சென்றதாகக் கூறினர். இந்த இரு நபர்களையும் கண்டுபிடிப்பதில் பொலிஸார் இப்பொழுது ஈடுபட்டுள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை, மித்தபால இரு நபர்களை ஏற்றிக்கொண்டு நிக்கவெரட்டியாவிலிருந்து புறப்பட்டுச் சென்றதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

சிலாபம், புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த பொலிஸாரும், மற்றும் வடமத்திய மாகாண பொலிஸாரும், இக்கொலை சம்பந்தமாக புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

## விவசாயிகள் சங்கம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், வியாழன்

விவசாயிகளைப் பாதிக்கும் முறையில் கூலித் தொழிலாளர்கள் தாம் நினைத்தவாறு சம்பளத்தை வாங்க எத்தனிப்பதால் கூலிச் சம்பளம் பற்றி ஆராய்வதற்காக கருகம்பழை கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தெல்லிப்பழை மேற்கு விவசாயிகள் சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இக்கூட்டத்திற்கு டாக்டர். பி. பொன்னம்பலம் தலைமை வகித்தார். சங்க நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்: திருவாளர்கள் பி. பொன்னம்பலம், க. வைரவப்பிள்ளை, க. சோதிநாகரத்தினம், தலைவர்: திரு. பொ. சுப்பிரமணியம், உபதலைவர்கள்: திருவாளர்கள் வி. சங்கரப்பிள்ளை, வி. நாகரத்தினம், பூ. சிற்றம்பலம், சி. செல்லையா, காரியதரிசி: திரு. ச. திருநாவுக்கரசு, உப-காரியதரிசி திரு. அ. சின்னத்தம்பு, தனாதிகாரி: திரு. ஆ. நாகலிங்கம். 22 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

## வர்த்தக ஒப்பந்தம் நீடிப்பு

கொழும்பு, புதன்

இலங்கைக்கும் ஈரானுக்குமிடையேயான வர்த்தக ஒப்பந்தம் மேலும் ஒரு வருடத்துக்குப் புதிப்பிக்கப் பட்டிருக்கிறது. இப்போதுள்ள ஒப்பந்தம் வருகிற 18-ம் திகதியுடன் முடிவடைகிறது. இந்த ஒப்பந்தத்தின்படி 10 லட்சம் பவுண் மதிப்புள்ள தேயிலையை ஈரான் வாங்குகிறது.

## "கூட்டுறவு ஸ்தாபனங்கள் தூய்மைபெறுகின்றன"

### பிரதமர் உரை

அநுராதபுரம், வியாழன்

"கூட்டுறவு ஸ்தாபனங்கள் திருட்டு வேலைகளில் ஈடுபட்டிருப்பதாகவும் திருட்டுவேலைகள் நடைபெறும் குகைகள் என்றும் முன்னர் கூறப்பட்டன. ஆனல் இப்பொழுது இந்த கூட்டுறவு ஸ்தாபனங்கள் அவ்வளவு மோசமான நிலையிலில்லை. எனினும் சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. இவை கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு புதிதானவையல்ல" என பிரதமர் திருமதி சிறிமா இங்கு புதிதாகக் கட்டப்பட்டுள்ள பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் யூனியன் கட்டிடத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

பிரதமர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"சிலர் கூறுவது போன்று கூட்டுறவுச்சங்கங்களில் ஊழல்கள் மலிந்திருந்தால் இவ்வளவு அழகான கட்டடங்களை எவ்வாறு கட்டியிருக்கமுடியும்? சமீபகாலங்களில் நான் பல்வேறு கூட்டுறவு சங்கக் கட்டடங்களைத் திறந்துவைத்துள்ளேன். எனவே கூட்டுறவு சங்கங்களில் குறிப்பிடட சிலரால் குறைகூறப்படுவது அவ்வளவு ஊழல் நிறைந்திருக்கவில்லை என்பது புலனாகிறன்து.

கூட்டுறவு ஸ்தாபனங்களிலுள்ள ஊழல்களைக் களையும் பொறுப்புகூட்டுறவுஸ்தாபனங்களின் அங்கத்தவர்களையே சாரும்"

கைத்தொழில் உள்நாட்டுக் கலாசார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயகா பேசுகையில் கூட்டுறவு இயக்கம் பொதுமக்களின் இயக்கமென்றும் அதன் வெற்றியும் தோல்வியும் மக்களின் கையில் தான் தங்கியிருக்கிறதென்றும் கூறினர்.

## இரவு நேர வேலை இல்லை

### 18 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு

கொழும்பு, புதன்

எந்த கைத்தொழில் ஸ்தாபனங்களிலும் 18 வயதுக்குட்பட்ட பெண்களையும், ஆண்களையும், சிறுவர் சிறுமியர்களையும் இரவு நேரங்களில் வேலைக்கென நிறுத்திவைக்கக் கூடாதெனத் தெரிவிக்கும் திருத்த மசோதாவொன்றை தொழில் தேசியமய சேவை மந்திரி நேற்று சனப்பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பித்தார்.

1956-ம் வருடத்து 47–ம் சட்ட திருத்த மசோதாவின் 4-ம் பிரிவின்படி இரவுநேரம் என்ருல் இரவு 10 மணியிலிருந்து விடியற்காலை 5 மணி வரையான தொடர்பான 11 மணிநேரம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வட்டார அபிவிருத்தி

யாழ்ப்பாணம், வியாழன்

காங்கேசன்துறை பட்டின சபை 4–ம் வட்டார மக்கள் தமது வட்டார நலன்களைப் பற்றி ஆராய்வதற்காக பட்டின சபைத் தலைவர் திரு. மு. திடவீரசிங்கம், உப தலைவர் திரு ச. கிருபாமூர்த்தி, 4-ம் வட்டார அங்கத்தவர் திரு. சு. வே. சீனிவாசகம் ஆகியோரை அழைத்துக் கூட்டமொன்றினை நடத்தினர். இக் கூட்டத்தில் 4-ம் வட்டார அபிவிருத்தி வேலைகள் வற்புறுத்திக் கூறப்பட்டது.




# இந்திய துருப்புக்கள் பர்மாவுக்குள் புகுந்தனவா?

புதுடில்லி, பெப். 7

பர்மா எல்லைக்குள் இந்தியத் துருப்புக்கள் ஊடுருவியதாக ரங்கூன் பத்திரிகையொன்றில் வெளிவந்த செய்தியை அர்த்தமற்றது என்று இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பர்மா எல்லைக்குள் சுமார் 160 இந்தியத் துருப்புக்கள் ஊடுருவல் செய்து முப்பது மைல்களுக்கு அப்பால் உள்ள ஒரு கிராமத்துக்குள் சென்று உணவுப்பொருள்கள் வாங்கியதாக ரங்கூன் தினசரிப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டிருந்தது. இச்செய்தி உண்மையல்லவென்றும் இது ஆதாரமும் அர்த்தமுமற்ற செய்தி என்றும் வெளிவிவகார அமைச்சு அதிகாரி கூறினர்.

இந்தியத் துருப்புக்கள் ஊடுருவியதாகக் கூறப்பட்ட செய்தியை பர்மிய அரசாங்கமும் இன்று மறுத்தது.

## சுவர்ண்சிங் நம்பிக்கை

புதுடில்லி, பெப். 7

காஷ்மீர் சம்பந்தமாக டில்லியில் நடைபெற்ற இந்தியா பாகிஸ்தான் பேச்சுக்களில் ஏற்பட்ட தற்காலிக முடிவிலிருந்து கராச்சி பேச்சுகள் தொடர்ந்து முன்னேற்றம் காணும் என நம்புவதாய், இந்திய தூதுகோஷ்டித் தலைவர் திரு. சுபர்ணசிங் கூறினர். 3 நாட்களுக்கு மொத்தம் 6 சந்திப்புகள் இரு தூதுகோஷ்டிகளுக்குமிடையே நடைபெறும் என கராச்சி செய்தி ஒன்று கூறுகிறது.

## கம்யூனிஸ்ட் குழு கோரிக்கை

ஹைதராபாக், பெப். 7

ஹைதராபாத் நகரகம்யூனிஸ்ட் குழு இன்று நிறைவேற்றியுள்ள ஒரு தீர்மானத்தில் கொழும்பு மகாநாட்டு யோசனைகளை அப்படியே ஏற்றுக்கொள்ளுமாறு சீனவைக் கேட்டுக் கொண்டது.

வியாபாரம்பெருக விளம்பரம்செய்க

## பொலிஸ் தாக்குதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர் உறுதியளித்திருந்தும் இன்னும் அவ்வாறு செய்யப்படவில்லை."

திரு. வி. பி. டி' சில்வா: "அப்போது பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசி என்ற முறையில் அவ்வாறு கூறினேன். இப்போது நான் அப்பதவியில் இல்லை."

டாக்டர் நாகநாதன்: "அப்போது நீங்கள் பிரதமர் என்ற முறையில் இருந்தீர்கள்."

திரு. கந்தையா: அப்போது நீங்கள் என்ன சொன்னீர்கள் என்பது ஞாபகமில்லாவிட்டால் உங்கள் பேச்சுக்கள் அடங்கிய ஹன்சார்டைத்தருகிறேன்."

திரு. சில்வா: "ஒரு விசாரணை நடத்தப்பட்டது. அதன் முடிவு பற்றித் தெரியாது"

டாக்டர் நாகநாதன்: "சம்பந்தப்பட்ட இருவர் அழைக்கப்படாமல் விசாரணை நடத்துவதில் என்ன பயன? பிரதமந்திரியின் சேலைக்குப்பின் மறைந்து கொள்ளலாம் எனக் கருதுகிறீர்களா?"

அரசாங்க எம். பி. க்கள்: "வாபஸ் பெறுக."

நாகநாதன்: "நான் கடுமையாகஆட்சேபிக்கிறேன். மந்திரிகள் தங்கள்உறுதிமொழிகளைக் காப்பாற்றுமலிருக்கக் கூடாது என நீங்கள் வற்புறுத்த வேண்டும்."

உபசபாநாயகர்: ஒழுங்கு ஒழுங்கு!"

## கி. ஐரோப்பாவுக்கு ஆர் கே. நேரு விஜயம்

புதுடில்லி, பெப். 7

இந்திய வெளிவிவகாரக் காரியதரிசி திரு. ஆர். கே. நேரு, இம்மாதம் 14-ம் திகதி கிழக்கு ஐரோப்பாவில் சுற்றுப்பிரயாணம் செய்யும்பொருட்டு புறப்படுகிறர். பெல்கிரேட், புடாபொஸ்ட், வார்ஸா, பிரேக் ஆகிய நகரங்களுக்கு சென்றபின், அவர் மாஸ்கோ வழியாக இந்தியா திரும்புவார்.

## பம்பாயில் கிரீஸ்மன்னர்

பம்பாய், பெப். 7

கிரீஸ்மன்னர் தம்பதிகள் இன்று பம்பாய் வந்து சேர்ந்தனர். கவர்னர் ஸ்ரீமதி விஜலட்சுமிபண்டிட், அவர்களை வரவேற்று ராஜ்பவனுக்கு அழைத்துச் சென்றர்.

## கண் இழந்தவர் ஒளி பெற்றர்

கொழும்பு, வியாழன்

செவ்வாய்க்கிழமையன்று மரணமான அறுபது வயதுள்ள டபிளியு கே. பெர்ணண்டோ அளித்த கண்தானத்தினல் கண்பார்வையை இழந்த இருவர் நேற்று மீண்டும் ஒளிபெற்றனர். இந்த வருடத்தில் இலங்கை கண்தான சங்கத்துக்குஇதுவரை நால்வர் கண்தானம் அளித்துள்ளனர்.

1961-ம் ஆண்டு இயங்க ஆரம்பித்த இலங்கை கண்தான சங்கத்துக்கு இதுவரை 24 பேர் கண்தானம் அளித்துள்ளனர்.

## மேளங்கள் திரும்ப கிடைத்தன

சிட்னி, பெப். 7

ஆஸதிரேலியா வந்திருந்த சித்திர சேனநாட்டியக குழுவினரிடம், தடுத்து வைக்கப்பட்டிருந்த மேளங்கள் திருப்பிக் கொடுக்கப்பட்டதால் இன்று சிட்னியில் அவர்கள் நாட்டிய நிகழ்ச்சி நடத்தினர்கள். தொற்றுநோய் காரணமாக இவை தடுக்கப்பட்டிருந்தன.



இலாஸ்டோ புதுவருட பரிசுப்போட்டிக்கு அனுப்பப்பட்ட கூப்பன்களை இலாஸ்டோ விளம்பர ஏஜன்ஸியைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் பரிசீலனை செய்கிருர்கள்.


## திருமண அழைப்பு

மணமகன்:- திரு க. செல்லையா ஐயர் அவர்களின் கனிஷ்ட புத்திரரும், வண்ணை முததமிழ்மணி திரு. சி. எஸ். எஸ். மணிபாகவதரின் சகோதரருமான

திருநிறைச்செல்வன் பாலசுப்பிரமணிய ஐயர் அவர்கள்

(ஆசிரியர் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயம்)

மணமகள்:- நல்லூர் காலஞ்சென்ற திரு. பாலசுப்பிரமணியக் குருக்களின் கனிஷ்ட புத்திரியும், கொழும்பு கப்பிதாவத்தை திரு. சண்முகரத்தினக் குருக்கள், யாழ்ப்பாணம் அஞ்சல்அலுவலகத்தைச் சேர்ந்த திரு. சுவாமிரத்தின சர்மா, பா. ஷண்முகராஜ சர்மா ஆகியோரின் சகோதரியுமான

திருநிறைச் செல்வி ராஜலக்ஷ்மி

இடம்:- யாழ்ப்பாணம் 12,வைமன்வீதியிலுள்ள மணமகள் இல்லம்.

(வரவேற்பு உபசாரம் அன்றுமாலை வட்டுக்கோட்டை மூளாய் வீதியிலுள்ள 'கலாமன்ற'த்தில் நடைபெறும்.)

காலம்:- நிகழும் சுபகிருது தைமாதம் 29-ம் திகதி (11-2-63) திங்கட்கிழமை பகல் 11 மணி 59 நிமி. தொடக்கம் 12 மணி 59 நிமி. வரையான விருஷபலக்கின சுபமுகூர்த்தம்.


## கட்டாய அம்மைப்பால் இயக்கம்

புதுடில்லி, பெப். 7

இந்தியாவில் பெரியம்மை பரவுதைத் தடுக்க அம்மைத் தடுப்பு ஊசி போடுவது கட்டாயமாக்கப்படும் என்றும், மீறி நடந்தால் 1 ஆண்டு சிறை, அல்லது அபராதம், அல்லது இரண்டும் விதிக்கப்படலாம் என்றும் அறிவிக்கப்படுகிறது.

## ரஷ்யருக்கு வெளியேற உத்தரவு

கான்பரா, பெப். 7

கான்பராவிலுள்ளரஷ்யதூதராலயத்தின் முதலாவது காரியதரிசியை நாட்டைவிட்டு வெளியேறுமாறு, ஆஸதிரேலிய அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. உளவு வேலைகளில் இவர் ஈடுபட்டிருந்தாராம்.

## இளைஞன் தற்கொலை

கும்புறுப்பிட்டிய, வியாழன்

தனது தங்கையின் 'காதல் தொடர்புகாரணமாக கிட்டலகம என்ற இடத்தைச் சேர்ந்த 23 வயதுள்ள இளைஞனை எஸ். குணசேகரா என்பவர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலைசெய்து கொண்டார்.

இறந்தவரின் தங்கை, ஒருவருடன் 'காதல் தொடர்பு' கொண்டிருந்தாரென்றும், இதை இறந்தவர் எதிர்த்தாரென்றும் மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

குணசேகரா எழுதியுள்ள ஒரு கடிதத்தில், தனது கௌரவத்தையும், அந்தஸ்தையும் காப்பாற்றிக்கொள்ளவேதான் தாம் தற்கொலை செய்து கொள்வதாக குறிப்பிட்டுள்ளார். விசாரணை முடிவில் தற்கொலை எனத்தீர்ப்பளிக்கப்பட்டது.

## இறைச்சிக்கடையுள் 'ஜீப்' சென்றது

### ஒருவர் கொல்லப்பட்டார்

கம்பஹா, வியாழன்

கவனக்குறைவாக செலுத்தப்பட்ட ஜீப் ஒன்று மாட்டிறைச்சிக் கடையுள் சென்றதால் இங்கு உறங்கிக்கொண்டிருந்த இறைச்சிக்கடைக்காரர் கொல்லப்பட்டார்.

இறைச்சிக்கடைக்காரரான 30 வயதுடைய தாகீர் மரணமானது சம்பந்தமான விசாரணை கம்பஹா மாஜிஸ்திரேட் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது மேற்படி தகவல் தெரிவிக்கப்பட்டது.

இறைச்சிக்கடைச் சொந்தக்காரரின் மகனை சலீமும் மேலும் மூவரும் ஒரு வைபவத்துக்கு சென்று விட்டு மதுபோதையில் ஜீப்பில் பாடிக்கொண்டு வந்ததாகவும் சலீமே ஜீப்பை வேகமாகச் செலுத்தி வந்ததாகவும் ஜீப் இறச்சிக் கடையில் மோதி உட்சென்றதாகவும் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் ஜீப்பில் சென்ற மூவரும் காயமடைந்தனர். இவர்கள் கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாஜிஸ்திரேட் இறந்தவரின் சடலத்தைப் பிரேத பரிசோதனை செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார். இது சம்பந்தமாக பொலிஸார் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர்.

வாஷிங்டன், பெப் 7

கியூபாவில் புதிய ரஷ்யபாது காப்பு தளங்கள் எதுவுமில்லை என அமெரிக்க பதுகாப்பு காரியதரிசி திரு மக்னமாரா கூறினர். ரோந்து நடவடிக்கையிலிருந்து இது புலப்படுவதாகவும் அவர் கூறினர்.


இன்று முதல்

கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டக்களப்பு) | ராஜ் (கொழும்பு) | வெம்பிளி (கண்டி)
ஸ்ரீகிருஷ்ணு (திருக்கோணமலை) | மொடர்ன் (பதுளை)

மற்றும் சில சினிமாஸ் திரைகளில்!

காதுக்கினிய பாடல்களும், திடுக்கிடும் சண்டைக் காட்சிகளும் நிறைந்த படம்

★ நாட்டுக்குத் தேவையான நல்ல கதை!

★ குடிப்பது ஒன்றே வாழ்வு என்று எண்ணுபவர்களுக்கு நல்ல பாடம்!!



சிவாஜி கணேசன், பத்மினி, ராகினி, தங்கவேலு, டி. ஆர். ராமச்சந்திரன், பி.கண்ணும்பா, சுந்தரிபாய், எம். ஆர். சந்தானம், பக்கிரிசாமி, புளிமூட்டை ராமசாமி, காலஞ்சென்ற சாயிராம்

மற்றும் பலர் நடித்த

# புனர்ஜென்மம்

பின்னணி:

சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன், ராஜா, திருச்சி லோகநாதன், ஜிக்கி, சுசீலா, ஜானகி, சரஸ்வதி

திரைக்கதை–வசனம் ஸ்ரீதர் | டைரக்ஷன் ஆர்.எஸ்.மணி | இசை டி.சலபதிரராவ்

மனோகரா (யாழ்ப்பாணம்)

எம். என். கண்ணப்பா, மாதுரிதேவி

மற்றும் பலர் நடித்த

தேவகி


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8-ந்திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.